
# திருக்கோயில்



அக்டோபர்
1998

விலை
ரூபாய் ஐந்து




**21.10.1998 ஐப்பசி சுவாதி நாளில் அருளாளர் விழாவினைக் காணும்**
**''காசினி மேல் வந்த அருட்கதிரோன்'' மெய்கண்ட தேவநாயனார்**



# திருக்கோயில்




திங்கள் இதழ்

தனி இதழ் : ரூ. 5.00

ஆண்டு உறுப்பினர் கட்டணம் : ரூ. 60.00

ஆயுள் உறுப்பினர் கட்டணம் : ரூ. 500.00

| மாலை 40 | திருவள்ளுவர் ஆண்டு 2029 வெகுதானிய ஆண்டு ஐப்பசி அக்டோபர் 1998 | மணி 10 |
|---|---|---|

சிறப்பாசிரியர்

**திருமிகு ச. மெய்கண்ட தேவன்,** இ.ஆ.ப.,
ஆணையாளர்

ஆசிரியர்

**முனைவர் த. அமிர்தலிங்கம்,**
எம்.ஏ., பி.எச்.டி.,

திருக்கோயில் நிர்வாகக் குழுவினர்

**திரு எஸ். கனகய்யா,** பி.எஸ்.சி., பிஎல்.,
கூடுதல் ஆணையாளர்

**திரு த. சுந்தரம்,** பி.ஏ., பி.எல்.,
இணை ஆணையாளர், தலைமை இடம்

**திரு மு. இராமச்சந்திரன்,** பி.ஏ.,
ஆணையாளரின் நேர்முக உதவியாளர்

**திரு தி. ஜெயராமன்,** பி.ஏ.பி.எல்.,
இணை ஆணையாளர் - செயல் அலுவலர்
அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி
திருக்கோயில், பழநி.

முகப்பு

திருச்செந்தூர் அருள்மிகு
சுப்பிரமணிய சுவாமி


## பொருளடக்கம்


*சமத்துவத்திற்காகப் பாடுபட்டவர் - செயல்படுத்தியவர் இராமானுஜர்*
- மாண்புமிகு தமிழக முதல்வர் ''முத்தமிழ் அறிஞர்'' டாக்டர் கலைஞர் அவர்கள்

*தலபுராணங்களைப் போற்றிப் பாதுகாத்திடுவோம்*
- மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்கள்

*முருகவேள் 108 போற்றி*

*கந்தர் சஷ்டி விழா*
- செவ்வேள்

*திருக்குளங்கள் பாதுகாப்புப் பற்றிய ஆணையாளர் சுற்றறிக்கை*

*திருக்குளத்திருப்பணித் தொண்டர்*
- முனைவர் த. அமிர்தலிங்கம்

*நவராத்திரி விழாவின் சிறப்பு*
- சக்தியின் மைந்தன்

*சைவமும் பெரிய புராணமும்*
- டாக்டர் இரா. செல்வகணபதி

*அருள்மிகு பண்ணாரி மாரியம்மன்*
- பட்டாபி சுப்பிரமணியம்

*திருமுறை திருத்தலங்களும் - இறைவன் இறைவி திருப்பெயர்களும்*

*வினாவும் விடையும்*

*வாசகர் எண்ணங்கள்*



உறுப்பினர் கட்டணம் அனுப்ப வேண்டிய முகவரி :

**உயர்திரு ஆணையாளர் அவர்கள்**

**திருக்கோயில்**

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை

**119,** உத்தமர் காந்தி சாலை, சென்னை - 600 034.

தொலைபேசி : 8279407

# சமத்துவத்திற்காகப் பாடுபட்டவர் - செயல்படுத்தியவர் இராமானுஜர்

*மாண்புமிகு தமிழக முதல்வர் "முத்தமிழ் அறிஞர்" டாக்டர் கலைஞர் அவர்கள்*

**ஆழ்வார்கள் ஆய்வுமையம் 1998-ஆம் ஆண்டிற்குரிய இராமானுசர் விருதினை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு வழங்கி மகிழ்ந்தது. அவ்விழாவில் மாண்புமிகு முதல்வர் ஆற்றிய இராமானுசரைப் பற்றிய சிறப்புரை இங்கு மகிழ்வுடன் வெளியிடப்படுகின்றது.**

**என்னையும் ஆழ்வார்கள், ஏற்றுக் கொள்கிறார்கள் என்பதில் பெருமைதான்**

இன்றைக்கு இந்த நாட்டிலே எந்தெந்த செயல்களைப் புரிய வேண்டுமென்று நாம் விரும்புகிறோமோ, எந்தெந்த முன்னேற்றங்கள் முகிழ்க்க வேண்டுமென்று ஆசைப்படுகிறோமோ இவைகளையெல்லாம் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு செய்து காட்டிய பெருமைக்குரியவர் இராமானுஜர் என்கிறபோது அந்த விருது கிடைப்பதிலே நான் பெருமைப் படுகிறேன். ஒருவேளை எனக்குக் கொடுக்கக் கூடாதென்று ஆர்.எம்.வீ. அவர்களோ - ஆழ்வார் மையமோ தீர்மானித்திருந்தால்தான் நான் வருத்தப்பட்டிருப்பேன். அவர்கள் வழங்க முன் வந்ததற்கு நான் பெருமைப்படுகிறேன். ஏனென்றால் ஆழ்வார்களுக்குப் பக்கத்திலே வரக்கூடாதென்று ஒதுக்கி வைத்து விட்டார்களோ என்ற ஐயப்பாடு எனக்கு இல்லாமல் என்னையும் ஆழ்வார்கள் மதிக்கிறார்கள் - என்னையும் ஆழ்வார்கள் விரும்புகிறார்கள் - என்னையும் ஆழ்வார்கள் ஏற்றுக் கொள்கிறார்கள் என்பதில் எனக்கொரு பெருமைதான்.

ஒரு முறை நம்முடைய மைலாப்பூர் கற்பகாம்பாள் திருமண மண்டபத்தில் தமிழகத்தில் உள்ள மடாதிபதிகள் இணைந்து நடத்திய தெய்வீகப் பேரவையின் மாநாடு ஒன்று நடைபெற்றது. நான் அப்போது இரண்டாவது முறையாக முதல்வராக இருக்கிறேன். அப்போது அதிலே உரையாற்றிய ஒரு ஆதீனகர்த்தா, கலைஞர் கடவுளை ஏற்றுக் கொள்கிறாரோ இல்லையோ, இருந்தாலும் நான் சொல்லுகிறேன் - என்று அவர் அந்தக் கருத்துக்களைச் சொல்லிக் கொண்டிருந்தார். அடுத்து நான் அதைப்பற்றி பேசும்போது, எனக்கு முன்னால் பேசிய ஆதீனகர்த்தர் அவர்கள் கலைஞர் கடவுளை ஏற்றுக் கொள்றாரோ இல்லையோ என்ற ஒரு சொற்றொடரைப் பயன்படுத்தினார், நான் அவருக்குச் சொன்னேன். நான் கடவுளை ஏற்றுக் கொள்கிறேனா இல்லையோ என்பதல்ல பிரச்சினை. கடவுள் என்னை ஏற்றுக் கொள்கிற அளவிற்கு நான் நடந்து கொள்கிறேனா இல்லையா என்பதுதான் எனக்குள்ள பிரச்சினை என்று குறிப்பிட்டேன். அதே நிலைதான் இப்போதும். அதைத்தான் ஆர்.எம்.வீ. அவர்களும் இங்கே அழகாக எடுத்துக் காட்டினார்கள்.

இதற்கெல்லாம் ஒரு முத்தாய்ப்பாகத்தான் பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்த அரசியல் இயக்கத்தைக் கண்ட போது கொட்டுகின்ற மழையிலே சென்னையிலே ராபின்சன் பார்க்கில் 1949ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 17-ஆம் நாள் சொன்னார்கள். ஒன்றே குலம், ஒருவனே தேவன், அதுவே நம்முடைய கடவுள் கொள்கை, சமுதாயக் கொள்கை என்று குறிப்பிட்டார்கள்.

அந்தக் கொள்கை வழி நடக்கின்ற நாங்கள் இராமானுஜருடைய பல்வேறு கோணங்களிலே ஒரு கோணம், எங்களுடைய கொள்கைக்கு ஏற்புடையதாக இருக்கிறது என்கிற நேரத்தில் அதை எதற்காக நாங்கள் புறக்கணிக்க வேண்டும், அதை எதற்காக நாங்கள் வெறுத்து ஒதுக்க வேண்டும், அதை எதற்காக நாங்கள் பயன்படுத்தாமல் - நாங்கள் பயன்படாதவர்களாக ஆக வேண்டும். எனவேதான் இராமானுஜரைப் போன்றவர்கள் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு எடுத்துச் சொன்ன அந்தக் கொள்கை இன்னமும் நிறைவேறாத சூழ்நிலையில் அவருடைய பெயரால் வழங்கப் படுகின்ற இந்த விருதினை பெறுகின்ற எனக்குப் பெருமை இருக்கிறதோ இல்லையோ இந்த விருதின் பலன், இதனுடைய விளைவு இன்னும் பல ஆண்டுகளுக்குப் பிறகு தமிழகம் சமத்துவமான பூமி - இந்தியா சமத்துவமான மண் என்ற ஒரு சூழ்நிலையை ஏற்படுத்துமேயானால் இந்த விருதுக்கு இன்றைய நாளை விட அன்றைய நாளில்தான் அதிகப் பெருமை என்பதை நான் இங்கே எடுத்துக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இராமானுஜர் அவர்கள் மாத்திரமல்ல, ஆழ்வார்கள் என்று சொல்லப்படுகின்ற இந்த 12 ஆழ்வார்களில் முதல் மூன்று ஆழ்வார்கள் தோன்றிய பகுதியே சென்னை, செங்கற்பட்டு பகுதிதான். அந்தப் பகுதிகளில் ஒன்றான திருப்பெரும்புதூரில் இராமானுஜர் கி.பி. 1017 ஆம் ஆண்டு பிறந்தார். இங்கே உரையாற்றியவர்கள் எல்லாம் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் என்று பொதுவாகச் சொன்னார்கள். நான் இது போன்ற நிகழ்ச்சிகளுக்கு வருவதற்கு முன் குறிப் பெடுக்காமல் வருவதில்லை (கைதட்டல்) முதலமைச்சர் தானே, என்ன பேசினாலும் கேட்டு விட்டு போவார்கள், எதையாவது பேசி விட்டுப் போகலாம் என்று வருவதில்லை. இன்று காலையிலிருந்து ஐந்து புத்தகங்கள், இராமானுஜரைப்பற்றிய புத்தகங்களைப் படித்து விட்டுத்தான் வந்தேன். அதிலே சிலவற்றை நம்முடைய நீதியரசர் ரெட்டியார் அவர்களே குறிப்பிட்டபோது, அடடா, நாம் எடுத்து வந்த குறிப்பையெல்லாம் இவர் பேசுகிறாரே என்றுகூட நான் ஆச்சரியப்பட்டேன், வருத்தப்படவில்லை. அதைக் கூட ஆர்.எம்.வீ.யிடம் சொன்னேன். அதற்கு அவர், இவை களையெல்லாம் அவர் விளக்க வேண்டுமென்பதற்காகத்தான் அவரை இந்த விழாவிற்கே அழைத்தோம் என்று குறிப்பிட்டார்.

## குருவுக்கே பொருள் விளக்கம் சொன்ன வித்தகர் இராமானுஜர்

எனவே, கி.பி. 1017 ஆம் ஆண்டு அதாவது தோராயமாக ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் என்று சொல்லாமல், சரியாக சொல்ல வேண்டுமேயானால், 981 ஆண்டுகளுக்கு முன்பு திருப்பெரும்புதூரில் இராமானுஜர் பிறந்தார். அவருடைய குருவாக அவர் ஏற்றுக் கொண்டவர் யாதவப் பிரகாசர் - அத்வைத ஆசிரியர் அவர். ஆனால் குருவுக்கும் மாணவருக்கும் அடிக்கடி சர்ச்சைகள். குருவை மிஞ்சிய சீடராக இருந்தார் இராமானுஜர். இராமானுஜரே அப்படியிருந்தாரே, நாம் இருந்தால் என்ன என்ற இன்றுள்ள சீடர்கள் (சிரிப்பு) கேட்கக் கூடாது. குருவையே மிஞ்சிய சிஷ்யர் என்றால் குருவே பாராட்டுகின்ற அளவிற்கு - போற்றுகின்ற அளவிற்கு - குருவே நினைக்காத கருத்துக்களை - பொருள் விளக்கங்களை - குருவுக்கே சொல்லித் தரக்கூடிய வித்தகராக மாணவப் பருவத்திலேயே இராமானுஜர் விளங்கினார். இதனால் குருவிற்கும் சீடருக்கும் அடிக்கடி சர்ச்சை வருகிறது என்பதைப்பற்றி பலரால் வெளியே பேசப்படுகின்றது.

உங்களுக்குத் தெரியும். இன்றைக்கு உள்ளவர்களுக்குத் தெரியாது. நம்முடைய மக்கள் தலைவர் மூப்பனாருக்கு நன்றாகத் தெரியும். அவர் தஞ்சாவூர்க்காரர். ஆர்.எம்.வீ. அவர்களுக்கும் நன்றாகத் தெரியும். கலை உலகத்திலே நீண்ட நாட்களாக இருப்பவர். குரு சீடர் என்றால் முன்பெல்லாம் பள்ளிக்கூடம் வைத்து, அங்கே ஒரு நாற்காலியில் குரு உட்கார்ந்து கொண்டு மாணவர்களையெல்லாம் எதிரிலே உட்கார வைத்து பாடம் நடத்துகின்ற அந்த நிலை அல்ல. அதிலும் குறிப்பாக வேதங்கள், மந்திரங்கள் இவைகளையெல்லாம் கற்றுக் கொள்கிற குரு மாணவர்கள் என்ற நிலை இருந்தாலும் அல்லது கலைத் துறையிலே பயிற்சி பெற வேண்டுமென்ற நிலை இருந்தாலும் குருவிடத்தில் மாணவன் அவர் வீட்டிலேயே தங்கிப் படித்து, பயிற்சி பெற்று தன் வித்தையைப் பெருக்கிக் கொள்வது பழைய கால வழக்கம். அதன்படி இந்த யாதவப் பிரகாசர் என்ற குருவிடத்தில் இராமானுஜர் சீடராக இருந்தபோது வழக்கம்போல் ஒருநாள் அவரை உட்கார வைத்து அவருக்கு எண்ணெய் தேய்த்துக் கொண்டிருந்தார். அந்தக் காலத்தில் இதெல்லாம் குருவிற்கு மாணவர்கள் செய்ய வேண்டிய கடமை.

இராமானுஜர் குருவிற்கு எண்ணெய் தேய்த்துக் கொண்டிருந்தபோது இருவருக்குமிடையே ஒரு சர்ச்சை ஏற்பட்டது. அப்படிப்பட்ட நேரத்திலே குரு ஒரு பெரிய விஷயத்தைப்பற்றி பேசியிருக்கக் கூடாது என்று இன்றைக்குக் கூட அதைப்பற்றி பலர் விமர்சித்துக் கொண்டிருக்கின்றார்கள் - அதைப்பற்றி ஆய்வு நடத்துகிறார்கள். திடீர் என்று குரு - ''கப்யாசம் - புண்டரீகாட்சம்'' என்ற சொற்றொடரைக் குறிப்பிட்டு அதற்கு விளக்கம் சொன்னார். அது சற்று ஆபாசமான விளக்கமாக இருந்தது. இராமானுஜர் எண்ணெய் தேய்த்துக் கொண்டிருந்தபோது குரு அவரைப் பார்த்து, சீடா உனக்குத் தெரியுமா? கப்யாசம், புண்டரீகாட்சம் என்றால் என்னவென்று தெரியுமா? என்று கேட்கிறார். சொல்லுங்கள் குருவே என்கிறார் இராமானுஜர்.

## கப்யாசம் என்ற சொற்றொடருக்கு இராமானுஜரின் விளக்கம்

குரு விளக்குகிறார். கப்யாசம் என்றால், கபி ஆசம் - கபி என்றால் குரங்கு, ஆசம் என்றால் குரங்கின் பின்புறம். அதோடு விடவில்லை. எதற்குச்சொல்கிறார் என்றால், பகவானுக்கு கோபம் வருகிறது. அந்தக் கோபத்தால் சிவந்த அவருடைய கண் எப்படி இருக்கிறதென்றால் கப்யாசம், அதாவது குரங்கின் பின்புறம்போல் இருக்கிறது என்று குரு விளக்குகிறார். இராமானுஜரால் அதைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. கடவுளுடைய கண்களைப்பற்றி - தான் வணங்குகின்ற பகவானுடைய கண்களைப்பற்றி அது கோபத்தால் சிவந்திருப்பதைப்பற்றி சொல்லும்போது, குரங்கின் பின்புறம்போல இருக்கின்றது என்று குரு

வியாக்யானம் செய்கிறாரே என்று எண்ணினார். கலகலவென கண்ணீர் வழிந்தது. குருவின் உடலிலே அந்தக் கண்ணீர் பட்டதும் அண்ணாந்து பார்த்து என்னப்பா, ஏன் அழுகிறாய் என்று கேட்கிறார். நீங்கள் சொன்ன விளக்கத்திற்காக அழுகிறேன் என்று தன் வேதனையைத் தெரிவித்தார்.

நீ சொல்லேன் விளக்கம், வேறு என்ன விளக்கம் இருக்கிறது என்று குரு ஆத்திரத்தோடு கேட்டார். அதற்கு இராமானுஜர், ஐயா, கபி என்றால் சூரியன், ஆசம் என்றால் தாமரை மலர். சூரியனைக் கண்ட தாமரை மலர்ந்தால் எப்படி சிகப்பாக இருக்குமோ அதைப் போலத்தான் பகவான் கண்கள் இருந்தன என்பதுதான் இதற்குச் சரியான விளக்கம் என்று கூறுகிறார். இதற்கு குரு நன்றி பாராட்ட வில்லை. பொறாமை ஏற்பட்டு விட்டது. இப்படி சில குருக்களுக்குப் பொறாமை ஏற்படுவது சகஜம். மாணவன் தன்னை மீறுகின்ற அளவிற்கு நடந்து விட்டால் சில குருக்களுக்கு பொறாமை ஏற்படும். அந்தப் பொறாமை ஏற்பட்ட க்ாரணத்தால் சும்மா யிருப்பார்களாசுற்றியிருப்பவர்கள்? மற்ற மாணவர்கள் இந்த மாணவனை ஒழிக்க இதுதான் சரியான நேரமென்று குருவோடு அமர்ந்து இவனைத் தீர்த்துக் கட்டி விட்டால் நல்லது. இல்லாவிட்டால் நம்முடைய சமய கடமைகளுக்கே கூட ஆபத்து என்றார்கள். குருவும் அந் நோக்கத்திலே இருந்தார். ஆனால் முறையைப் பற்றிச் சிந்தித்தார். வன்முறையால் அவனைக் கொன்று விட்டால் வெளியே தெரிந்து விடும். எனவே, கொல்வதற்கு வேறு என்ன மென்முறை இருக்கிறதென்று அவர்கள் ஆராய்ந்தார்கள். முடிவில் குருவே சொன்னார். எல்லா மாணவர்களையும் அழைத்துக் கொண்டு நான் காசிக்குச் செல்வதாகக் கூறி இராமானுஜனையும் அழைக்கிறேன். வருவான், அங்கே காசியில் நேரம் பார்த்து கங்கையில் நீராடுகின்ற நேரத்தில் கங்கா நீரில் அவனைத் தள்ளிவிட்டு ''எல்லோரையும்போல ''கங்கையில் ஸ்நானம் செய்து கொண்டிருந்தான், கங்கை நீர் அடித்துக் கொண்டு போய் விட்டது'' என்று கூறிவிடலாமென்று குருவே இந்த அருமையான யோசனையைச் சொல்லி இராமானுஜனை அழைத்தார்கள். அவரும் இணங்கிச் சென்றார். அவருக்கு இந்த சூழ்ச்சி தெரியாது.

## இராமானுஜர் வாழ்க்கையில் நடந்த வரலாற்று நிகழ்ச்சி

அவரோடு அவருடைய சிறிய தாயாரின் மகன் கோவிந்தன் - அவரும் அந்தக் குருவிடம் பயிற்சி பெறுபவர் - அவரும் சென்றார். பாதி தூரம் சென்றதும், அவர்களுடைய சூழ்ச்சியைப் புரிந்து கொண்ட கோவிந்தன், இராமானுஜரைத் தனியாக அழைத்துச் சென்று, இதுபோல் நடக்கவிருக்கின்றது. எனவே, நீ தப்பியோடி விடு, நான் மாத்திரம் சென்று நீ எங்கேயோ போய்விட்டதாக சமாளித்துக் கொள்கிறேன் என்று கூறி இராமானுஜரைத் தப்பியோடச் செய்துவிட்டு கோவிந்தன் மாத்திரம் குருவிடம் சென்று அவன் எங்கேயோ போய்விட்டான் என்று சொன்னதும் குருவிற்கு மகிழ்ச்சி. இந்த கானகத்தில் அவன் எங்கே போக முடியும்? எங்கு போனாலும் புலி, சிங்கம் போன்ற மிருகங்கள் கொன்று தீர்த்து விடும், பரவாயில்லை என்ற மகிழ்ச்சியோடு அவரும் மற்றவர்களும் காசிக்குச் சென்றுவிட்டு நீண்ட நாட்களுக்குப் பின்னர் திரும்பினார்கள்.

திரும்பி வரும்போது அவர்கள் எதிரிலே ஒரு பெரிய கூட்டம் போற்றிப் புகழ்ந்து பாராட்டிக் கொண்டிருக்க சீடர்கள் சூழ இராமானுஜர் வருவதைக் கண்டு திகைத்துப் போனார் என்பது இராமானுஜர் வாழ்க்கை வரலாற்றிலே ஒரு பெரிய முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சி.

இதை நான் குறிப்பிடுவதற்குக் காரணம் இராமானுஜராக பிறந்துவிட்ட காரணத்தால் அவருக்கும் சிக்கல் இல்லாத வாழ்க்கை கிடையாது. அவருக்கும் வாழ்க்கை பிரச்சினைதான். அவரையும் எப்படியும் வீழ்த்த வேண்டுமென்று குருவே எண்ணுமளவிற்கு அவருக்கு வாழ்க்கை போராட்டமாகத்தான் இருந்திருக்கின்றது. அதிலிருந்து அவர் தப்பித் தான் வாழ்ந்திருக்கிறார்.

நீதியரசர் ரெட்டியார் குறிப்பிட்டதைப்போல அவர் தன்னுடைய ஆசானாக நான் குறிப்பிட்ட அந்தக் குருநாதரை முதலிலே ஏற்றுக் கொண்டிருந்தார் என்றாலுங்கூட, இதற்குப் பிறகு அவர் தனக்கு அறிவுரை கூறுகின்ற ஆசானாக ஏற்றுக் கொள்ளப்பட்டவர் திருக்கச்சி நம்பி. அந்த திருக்கச்சி நம்பி தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர். இராமானுஜர் உயர் குலத்தில் பிறந்தவர். உயர் குலத்திலே பிறந்தவராக கருதப்படுபவர். அவர் தனக்கு அறிவுரை கூறுகின்ற ஆசானாக ஏற்றுக் கொள்ளப்பட்டவர்தான் திருக்கச்சி நம்பி என்ற தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர். இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு அவர் காட்டிய வழிதான் இராமானுஜர் நடக்கின்ற வழியாக அமைந்தது. இராமானுஜருடைய மாணவர்கள் பல பேர் தீண்டத் தகாத வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்பார்கள். அவர்களில் ஒருவர்தான் உறங்கா வில்லிதாசர் என்பவர். அந்த உறங்கா வில்லி தாசனைத் தான் காவிரி கரைக்கு நீராடச் சென்று - செல்லும்போது ஒரு அந்தணருடைய தோளின் மீது கைபோட்டுக்கொண்டு அழைத்துப்போய், அங்கே நீராடிவிட்டுத் திரும்பும்போது இந்த உறங்கா வில்லி தாசர் என்ற தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த

வருடைய தோளிலேதான் கை போட்டுக் கொண்டு இராமானுஜர் நடந்துவந்திருக்கிறார். அப்போது அவ ரைப் பார்த்து அந்தணர்கள் இதென்ன அநியாயம், இப்படி நீங்கள் நடந்துகொள்ளலாமா என்று கேட் டார்கள். அதற்கு இராமானுஜர், பக்தி மார்க்கத்தில் ஈடுபடுவதற்கு சாதி ஒரு தடையல்ல என்ற அந்தக் கருத்தை தெரிவித்தார்.

அது மாத்திரமல்ல; கல்விச்செருக்கு, செல் வச்செருக்கு, சாதிச்செருக்கு என்ற மூன்று செருக்குகள் உண்டு. என்னைப் பார்த்து இவன் தோளிலே கை போட்டுக் கொண்டு வரலாமா என்று கேட்கின்ற நீங்கள் இந்த மூன்று செருக்கும் இல்லாதவர்கள் என்று எனக்குத் தெரிகிறது. இருந்தாலும்கூட, நீங்கள் இந்தக் கேள்வியைக் கேட்டதன்மூலமாக சாதிச்செருக்கே இருக்கமுடியாத ஒருவனை வெறுக்கிறீர்கள் என்று எனக்குப் புரிகிறது. இவைகள் ஒழிந்த நிலைதான் சமுதாயத்திற்குத் தேவை என்பதை நான் எடுத்துக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த நிலை ஏற்பட்டால்தான் சமுதாயம் முன்னேறமுடியும், வாழ முடியுமென்று அவர்களுக்கு எடுத்துச்சொன்னார் என்பது அவருடைய வரலாற்றிலே ஒரு புரட்சிகரமான ஏடாகும்.

பக்தி மார்க்கத்திலே ஈடுபடுவதற்கு சாதி ஒரு தடையல்ல. எல்லா சாதியினரும், ஏன் பெண்களும் கூட பக்தி வழியிலே இறைவனை அடையலாம் என்று முழங்கியவர் இராமானுஜர். ஒரு குரு மாணவனுக்கு மாத்திரம் உபதேசிப்பது என்ற வரம்பை நீக்கி எத்தனை சீடர்களுக்கு வேண்டுமானாலும் உபதேசிக்கலாம், சீடனுடைய தகுதியைப் பார்க்காமல் அவனுடைய ஆர்வத்தை மாத்திரமே நோக்கி உபதேசிக்கவேண்டு மென்று சொல்லி அதையும் நடத்திக்காட்டினார். இதனால் பக்தியின் பயனாகிய முக்தியும் ஒரு சில ருடைய சொத்தன்று. அது எல்லோருக்கும் பொது வுடைமை என்றாக்கியவர் இராமானுஜர் என்பது தெளிவாகிறது.

இவருக்கு முன்னால் வாழ்ந்த ஆழ்வார்கள் இதைப் பேசியிருக்கிறார்கள். நாதமுனிகள் இந்த அடிப்படையிலே சிந்தித்திருக்கிறார். உய்யகொண் டார், ஆளவந்தார் போன்றவர்களும் தங்கள் அளவிலே இவ்வாறு நடந்து காட்டியிருக்கிறார்கள். ஆனால் இதை ஒரு சமயப் பொதுவுடைமையாக இரு இயக்கமாகவே நடத்திய பெருமை இராமானுஜர் ஒருவருக்குத்தான் உண்டு. அதனால்தான் நான் இன்று ஒரு வார இதழ் படித்தேன். அதில் நல்ல எழுத்தாளரான இந்திரா பார்த்தசாரதி இராமானுஜரைப் பற்றி ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார். அதிலே குறிப்பிடுகிறார். - ''அந்தக் காலத்துப்பெரியார்'' - என்று இராமானுஜரைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார். நான் சொன்னாலோ அல்லது ஆர்.எம்.வீ. சொன்னாலோ அது அவ்வளவு பொருத்த மாக இருக்காது. இராமானுஜர் அந்தக் காலத்துப் பெரியார் என்று இந்திரா பார்த்தசாரதி அந்த நீண்ட கட்டுரையில் கணையாழி இதழில் இராமானுஜரைப் பற்றிக் குறிப்பிட்டிக்கிருக்கிறார். இந்திரா பார்த்த சாரதியும் அப்படி குறிப்பிட்டிருக்கிறார் என்பதை எடுத்துக்காட்டத்தான் இதை நான் இங்கே குறிப் பிட்டேன். எல்லோரும் சமத்துவமாக இருக்கும்போது பிறகு எதற்காக சமத்துவபுரம்? இந்த ஆயிரம் ஆண்டுக் காலம் இராமானுஜர் போன்றவர்கள் எடுத்துச் சொன்ன கருத்துக்களை நாம் ஏற்று நடக்கவில்லை. தொடர்ந்து அந்த வழியைப் பின்பற்றவில்லை. அதனால்தான் இந்த நிலை நமக்கு ஏற்பட்டிருக்கின்றது என்பதை நான் இங்கே கூற விரும்புகிறேன்.

## சோழ மன்னர்களால் ஏற்பட்ட பெரும் எதிர்ப்பு

அவருக்குத் தமிழகத்தில் சில தமிழ் மன்னர் களால் அதிலும் குறிப்பாக சோழ மன்னர்களால் பெரும் எதிர்ப்பு ஏற்பட்டது. அதுதான் எனக்கு வேதனை அளிக்கக்கூடிய நிகழ்ச்சி. நானும் மூப்ப னாரும் சோழநாட்டுக்காரர்கள். ஆனால் அன்றைக்கு ஒரு சோழ மன்னர் - அந்த மன்னருடைய பெயர் கிருமிகண்ட சோழன். அவனால் இராமானுஜருக்கு ஒரு எதிர்ப்பு ஏற்பட்டு அவர் அந்த மன்னருடைய ஆட்சி யிலே வாழ விரும்பாமல் பன்னிரண்டு ஆண்டுக்காலம் மைசூர் பகுதியிலே சென்று வாழ்ந்தார். அப்படி வாழ்ந்த அந்த பன்னிரண்டுஆண்டு காலத்திலேதான் இங்கே கூறப்பட்டதே மேலக்கோட்டை திருநாராயண புரம் - அங்கே தாழ்த்தப்பட்டவர்களை அழைத்துக் கொண்டு ஆலயப்பிரவேசம் என்ற அருமையான புரட்சிகரமான செயலை அன்றைக்குத் தொடங்கி வைத்தார் இராமானுஜர்.

இராமானுஜர் எதிலும் பிடிவாத குணம் உள்ள வர் என்பவர் மாத்திரமல்ல; எதையும் தீர்க்கமாகச் சிந்தித்து அதனால் வருகின்ற விளைவுகளைப் பற்றிக் கவலைப்படாமல் பெரியார் எப்படி உறுதியான குணம் படைத்தவராக இருந்தாரோ அதைப்போலவே இருந் திருக்கிறார் என்பதற்கான உதாரணம்தான் திருக் கோட்டியூர் நம்பிகள் இடத்திலே அவர் நடந்து கொண்டமுறை.

17 அல்லது 18 முறை படையெடுத்திருக் கிறார் - மந்திரச் சொல்லை அவரிடமிருந்து கற்றுக் கொள்வதற்காக, 18 வது முறைதான் அதிலே வெற்றி பெற்றார். அப்போது திருக்கோட்டியூர் நம்பி அவ ருடைய காதிலே மந்திரத்தை உபதேசித்து ''இதை நீ கடைசிவரை இன்னொருவருக்கு வெளியிடக்கூடாது,

அப்படி வெளியிடுவதாக இருந்தால் கடைசிகாலத்திலே ஒரேயொருவன் காதிலேதான் இதைச சொல்ல வேண்டும், இதை மீறி நடந்தால் உனக்கு நன்மை இல்லை. தீமைதான் கிடைக்கும், சத்தியம் செய்து கொடு என்று கேட்டார். திருக்கோட்டியூர் நம்பியின் கரங்களைப் பிடித்து இராமானுஜர் சத்தியமும் செய்து கொடுத்தார் - நான் யாரிடமும் சொல்ல மாட்டேன் என்று. பிறகு திருக்கோட்டியூர்வந்து கோபுரத்திலே ஏறி நின்றார் - அந்த ஊர் மக்களையெல்லாம் அழைத்தார். எல்லாரும் வந்தார்கள். அவர்களைப் பார்த்து திருக்கோட்டியூர் நம்பி சொல்லிக்கொடுத்த அந்த ரகசிய மந்திரத்தை அனைவருக்கும் விளங்கக்கூடிய அளவிற்கு உபதேசித்தார்.

இந்தச் செய்தியைக் கேட்டதும் திருக்கோட்டியூர் நம்பி திகைத்தார், ஆத்திரப்பட்டார், இராமானுஜரை அழைத்துவரச் செய்தார்; எப்படி சத்தியம் செய்துவிட்டு மீறினாய் என்று கேட்டார். ''சொன்னவனுக்கு தீமை ஏற்படும், கேட்டவனுக்கு நன்மை ஏற்படுமென்றால், கேட்டவர்கள் பலர். சொன்னவன் நான் ஒருவன், இந்த ஒருவன் தீமைக்கு ஆளானால் பரவாயில்லை, பலர் நன்மைக்கு ஆளாவார்கள், எனவேதான் பலர் அறிய அதை நான் சொன்னேன்'' என்று குறிப்பிட்டார். இதைக் கேட்ட குருநாதர், பழைய குருநாதரைப் போல் அல்ல. இவரைக் கட்டித் தழுவி, நீதான் எனக்கு வழிகாட்டியப்பா என்று சொன்னார் என்பது அவருடை வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படக்கூடிய ஒரு பகுதியாகும்.

இந்த விருது வழங்குகின்ற விழாவை ஒவ்வொரு ஆண்டும் ஆழ்வார்கள் மையத்தின் சார்பில் நடத்திக் கொண்டிருக்கின்ற ஆர்.எம்.வீ. அவர்களுக்கும் செயலாளர் ஜெகத்ரட்சகன் அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

எனக்குப் பொன்னாடை போர்த்தினார்கள். இராமானுஜர் படம் பொறித்த விருது கேடயத்தை வழங்கினார்கள். அத்துடன் நில்லாமல் என்னுடைய 75 வயதைக் காட்டும்வகையில் 75 ஆயிரம் ரூபாயைப் பரிசாகவும் தந்திருக்கின்றார்கள். அப்பொழுதுதான் நான் எண்ணிக்கொண்டேன். 75 வயது தானேஆகிறது, 100ஆக ஆகியிருக்கக்கூடாதா (சிரிப்பு) என்று எண்ணிக் கொண்டேன்.

**ராஜாராஜசோழன் விருதுக்காக தரப்பட்ட ரூ. 1 லட்சம்**

நான் பொதுவாக இதுபோல் விருதுகளில் தரப்படும் பரிசுகளையெல்லாம் எடுத்துக்கொள்வதில்லை என்பது உங்களுக்குத் தெரியும். எனக்குப் பல இடங்களில் தரப்பட்ட விருதுகள் - நம்முடைய முன்னாள் குடியரசு துணைத்தலைவர் அவர்களே வந்திருந்து தஞ்சையிலேயே வழங்கிய ராஜராஜ சோழன் விருதுக்காக தரப்பட்ட ஒரு இலட்சம் ரூபாயை அந்தப் பல்கலைக் கழகத்திற்கே தந்து என்னுடைய தந்தையார்தாயார் பெயரில் ஒரு அறக்கட்டளை நிறுவி, அதன் பேரில் பல சொற்பொழிவுகளை நடத்துங்கள் என்று கொடுத்துவிட்டேன்.

**சமத்துவபுரம் திட்டத்துக்கு ரூ.75 ஆயிரம் வழங்குகிறேன்.**

இங்கேயும் அப்படி கொடுத்துவிடுவேன் என்று ஜெகத்ரட்சகன் எண்ணக்கூடாது (சிரிப்பு) ஆர்.எம்.வீ.யும் எதிர்ப்பார்க்கக்கூடாது. இதுகுறித்து நானும் மூப்பனார் அவர்களும் யோசித்து முடிவெடுத்திருக்கிறோம். இராமானுஜர் சமத்துவத்திற்காகப் பாடுபட்டவர். அதைச் செயல்படுத்தியவர். எனவே, அவர் பெயரால் தரப்பட்ட விருதை இந்த அரசின் சார்பாக நான் தொடங்கியிருக்கின்ற சமத்துவபுரங்களுக்கு வழங்குவதற்கு இந்த 75 ஆயிரம் ரூபாயை அரசின் நிதியிலே சேர்க்கிறேன் (பலத்த கைதட்டல்) இந்த 75 ஆயிரம் ரூபாய் மாத்திரம் அதற்குப் போதாது. அரசிடம் நிதி இருக்கிறது. செலவழிக்கலாம். ஆனால் உள்ள நிதி எல்லாம் ஊதியத்திற்காக வழங்குவதற்கே சரி பாதிக்கு மேல் போய்விடுகிறது என்பதை நீங்கள் அறிவீர்கள். எனவே, நீங்களும் சமத்துவபுரத்தில் ஆர்வம் உள்ளவர்கள் என்பதை எடுத்துக்காட்ட - நீங்கள் என்றால் இங்கே மண்டபத்தில் உள்ளவர்கள் மாத்திரமல்ல, தமிழகத்திலே உள்ள எல்லா மக்களும் - பெரியாருடைய, அண்ணாவினுடைய, புரட்சிக்கவிஞருடைய, இராமானுஜருடைய கருத்தில் - சமத்துவ நோக்கத்திலே அனைவருக்கும் ஆர்வம் இருக்கிறது என்பதைக் காட்டும் வகையிலே - அதை மெய்ப்பிக்கும் வகையில் ஒவ்வொருவரும் உங்களால் இயன்ற நிதியைச் சமத்துவபுரம் திட்டத்திற்கு வழங்கிட வேண்டிக்கொள்கிறேன். வணக்கம்.

## இராமாநுசர் பெருமை போற்றிடுவோம்

*''எனக்கு உற்ற செல்வம் இராமாநுசன்''*
*''மொழியைக் கடக்கும் பெரும் புகழான்''*
*''இராமாநுசன் என்தன் மாநிதியே''*

*- இராமாநுச நூற்றந்தாதியிலிருந்து*

# தலபுராணங்களைப் போற்றிப் பாதுகாத்திடுவோம்

மாண்புமிகு தமிழ்வளர்ச்சி, தமிழ்ப் பண்பாடு, இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை அமைச்சர் முனைவர் மு.தமிழ்க்குடிமகன் அவர்கள்

''இருந்தமிழே உன்னால் இருந்தேன் - இமையோர்
விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்''

என்பது ''தமிழ்விடு தூது'' நூலாசிரியர் வழங்கியுள்ள விழுமிய கருத்தாகும்.

தமிழமுதம் நம்போன்ற மாந்தருக்கு மட்டு மன்றி, இறைவருக்கும் திகட்டாத தீஞ்சுவைத் தெள்ளமுதாக அமைவதை இலக்கியங்கள் நமக்கு நன்கு எடுத்துக்காட்டுகின்றன.

''தமரநீர்ப் புவனம் முழுதொருங்கு ஈன்றாள்
தடாதகா தேவி என்று ஒருபேர்
தரிக்க வந்ததுவும் தனிமுதல் ஒரு நீ
சவுந்தர மாறன் ஆனதுவும்
குமரவேள் வழுதி உக்கிரன் எனப்பேர்
கொண்டதும், தண்டமிழ் மதுரம்
கூட்டுண எழுந்த வேட்கையால் எனில் இன்
கொழிதமிழ்ப் பெருமை யார் அறிவார்?''

என்று குமரகுருபரர் பாடியிருத்தல் காண்க.

''எத்திறத்தினும் ஏழுலகும்புகழ் முத்து முத்தமிழ்''

என்பது கவிச்சக்கரவர்த்தி வாக்கு.

''ஞானஉலா'' எனும் நூல் சுந்தரர் தோழராகிய சேரமான் பெருமான் நாயனாரால் திருக்கயிலையில் அருளிச்செய்யப்பட்ட சிறப்புடையது. ஆதலால் மண்ணுலகம் அன்றி விண்ணுலகும், மூவுலகும் ஏழுலகும் புகழும் பெருமை பெற்றது நம் தமிழ்மொழியே என்பதைச் சான்றோர்கள் பலரும் எடுத்துரைத்துள்ளார்கள்.

''ஓங்கலிடைத் தோன்றி உயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத் திருள்அகற்றும் - ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிரொன் றேனையது
தன்னேரில்லாத தமிழ்''

என்ற தனிப்பாடல் உலகிருளை விரட்டி ஒளிகூட்டும் ஒப்பற்ற கதிரவனும் தமிழும் தனிப்பெருஞ்சிறப்பு மிக்கவை எனப் புகழ்ந்துரைப்பதை எண்ணி எண்ணி நாம் இன்புறலாம்.


இத்தகைய தன்னேரிலாத தமிழ் மொழிக்கு அணிசேர்ப்பனவாக ஆயிரமாயிரம் பைந்தமிழ்ப் பனுவல்களை நம் முன்னோர்கள் படைத்தளித்துச் சென்றுள்ளார்கள்.

மூத்தோர்கள் பாடியருளியுள்ள பத்துப்பாட்டு, எட்டுத்தொகை நூல்களும், கேடில் பதினெண் கீழ்க் கணக்கு நூல்களும், நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம் முதலான காப்பியங்களும், தோத்திரசாத்திர நூல்களும், பாடற்கரிய பரணி முதலான சிற்றிலக்கியங்களும், இன்னமுள்ள வெள்ளத்தினும் மிகுந்த இலக்கியங்கள் யாவும் நம் தமிழ்மொழி காக்கும் மெய்க்காப்பாளர்கள் என்பது ''தமிழ்விடு தூது'' நூலாசிரியர் கூறியுள்ள அரிய கருத்தாகும்.

முரசம் கறங்க, முடிவேந்தர் போற்ற இராச காரியம் செய்யும் தமிழே! ''பாரில் அரியாசனம் உனக்கே ஆனால் உனக்குச் சரியாரும் உண்டோ தமிழே'' என்று நம் தமிழ்மொழி பெற்றுள்ள ஈடு இணையற்ற இலக்கியச்செல்வத்தைப் போற்றியுள்ளது ''தமிழ்விடுதூது'' நூல்.

இத்தகைய தனிப்பெருமை மிக்க நம் தமிழ் மொழிக்கு மேலும் பெருமை சேர்ப்பன திருக் கோயில்களின் சிறப்பை விவரிக்கும் - மூர்த்தி தலம், தீர்த்தம் ஆகியவற்றின் பெருமையைப் பைந்தமிழ்ச் செய்யுட்களில் விவரித்துப் போற்றும் தலபுராணநூல்கள் ஆகும்.

தமிழும் சமயமும் தழைத்தோங்கவும், பக்தி உணர்வுடன் பண்பாட்டு ஒழுக்கங்கள் சிறக்கவும் இத்தலபுராண இலக்கியங்கள் ஆற்றியுள்ள பெருந் தொண்டினைப் போற்றிடவேண்டுவது தமிழ் மக்களின் தலையாய கடமையாகும்.



பன்னெடும் காலத்திற்கு முன்புதோன்றிய அரிய பல தமிழ் நூல்கள்போற்றுவார் இன்மையால் கிட்டுவதற்கு அரியனவாகிப் பின் எட்டாக் கனியாக மறைந்துபட்ட கொடுமையை எண்ணுங்கால் நம் தமிழ் நெஞ்சம், கலங்கித் துடிக்கும்.

அகத்தியம் முதலாக அழிந்துபட்ட இலக்கிய நூல்கள் எத்தனை எத்தனை? சிற்றிசை, பேரிசை என மறைந்துபட்ட இசை நூல்கள்தான் எத்தனை எத்தனை?

மதிவாணர் நாடகத் தமிழ் முதலான பல நாடக நூல்களும், கோள் நூல் முதலான பல வானசாத்திர நூல்களும் மறைந்துபட்டு, அழிந்துபட்ட அவலம் இனி நேர்ந்திடல் கூடாது.

திருக்கோயில்களின் அருமை, பெருமைகளை அனைவரும் அறிய தமிழ்ச் செய்யுட்களால் பாடிப் பரவும் தல புராண நூல்களைப் போற்றிக்காக்க வேண்டுவது இந்து சமய அறநிலையத்துறையின் தலையாய கடமை ஆவதை உணர்ந்து, தமிழ் அறிஞர் பெருமக்களின் துணையோடு அவற்றை எல்லாம் எளிய இனிய உரை விளக்கங்களோடு பதிப்பித்து வெளியிட்டு, அன்னைத் தமிழுக்கு ஆக்கமான பணிகளை அறநிலையத்துறை ஊக்கமுடன் ஆற்றிவருகின்றது.

இத்தமிழ்ப் பணியில் ஆர்வமுடன் ஈடுபட்டுள்ள அறநிலையத்துறை அதிகாரிகளையும், அலுவலர்களையும், திருக்கோயில் பணியாளர்களையும் நாம் மனமாரப் பாராட்டுகின்றேன்.

தமிழ் அன்பர்கள் அனைவரும் இத் தலபுராண நூல்களைப் படித்து இன்புற வேண்டுமெனக் கேட்டுக் கொள்கின்றேன்.

''என்னை நன்றாகக் கலைஞர் படைத்தார்
அன்னைத் தமிழுக்கு அணிசெய்யுமாறே''

★★★

# அருள்மிகு முருகவேள் 108 போற்றி

## தமிழ் அருச்சனை - அருள் வேண்டுதல்

**(சங்கற்பம்)**

நாளும் கோளும் நன்னிலை பொருந்திய இந்நன்னாளில் .................... அவர்களுக்கும் அவர்கள் குடும்பத்தார்க்கும், சுற்றத்தார்க்கும், சமூகத்தார்க்கும், உலகுயிர்கட்கும், அறம், பொருள், இன்பம், வீடு எனும் நாற்பயனும் பொருந்தி நன்னிலை எய்தவும் நீண்ட வாழ்நாள் பெருகவும், திருவருள் பெருகவும், மங்கல வாழ்வெய்தவும்

உமது திருவடிகளில்
மலர் தூவி வழிபாடு செய்கின்றோம்.

## அருள்மிகு முருகவேள் 8 போற்றிகள்

1. ஓம் அறுமுகச் சிவமே போற்றி.
2. ஓம் திருச்செந்தூரா போற்றி.
3. ஓம் திருப்பரங் குன்றா போற்றி.
4. ஓம் திரு ஆவி னன்குடியாய் போற்றி.
5. ஓம் திருவே ரகக்குருவே போற்றி.
6. ஓம் திருத்தணிகைத் தமிழே போற்றி.
7. ஓம் பழமுதிர் சோலையாய் போற்றி.
8. ஓம் வைரவேல் வீரா போற்றி போற்றி ஓம்!

## அருள்மிகு முருகவேள் 16 போற்றிகள்

1. ஓம் அறுமுகச் சிவமே போற்றி.
2. ஓம் உமையருட் செல்வா போற்றி.
3. ஓம் ஓங்காரப் பொருளே போற்றி.
4. ஓம் காவடி விருப்பனே போற்றி.
5. ஓம் குன்றுதோ றாடுவாய் போற்றி.
6. ஓம் கூத்தாடு மயிலோய் போற்றி.
7. ஓம் சைவக் கொழுந்தே போற்றி.
8. ஓம் ஞானப் பழமே போற்றி.
9. ஓம் திருச்செந்தூரா போற்றி.
10. ஓம் திருப்பரங் குன்றா போற்றி.
11. ஓம் திரு ஆவி னன்குடியாய் போற்றி.
12. ஓம் திருவே ரகக்குருவே போற்றி.
13. ஓம் திருத்தணிகைத் தமிழே போற்றி.
14. ஓம் பழமுதிர் சோலையாய் போற்றி.
15. ஓம் முத்தமிழ் முருகா போற்றி.
16. ஓம் வைரவேல் வீரா போற்றி போற்றி ஓம்!

## அருள்மிகு முருகவேள் 108 போற்றிகள்

1. ஓம் அறுமுகச் சிவமே போற்றி.
2. ஓம் அறுகுசூடிதன் இளையாய் போற்றி.
3. ஓம் அழகினுக் கழகே போற்றி.
4. ஓம் அருளினுக் கருளே போற்றி.
5. ஓம் அலங்கார நாயக போற்றி.
6. ஓம் அநுபூதி நாதனே போற்றி.
7. ஓம் அன்பின் அண்ணா போற்றி.
8. ஓம் ஆறுமுக அப்பா போற்றி.
9. ஓம் இமையோர் இறைவா போற்றி.
10. ஓம் இமயப் புகழோய் போற்றி.
11. ஓம் இருவினை நீக்குவாய் போற்றி.
12. ஓம் இருசுடர் ஆனாய் போற்றி.
13. ஓம் ஈசனார் குருவே போற்றி.
14. ஓம் ஈரேழ் உலகோய் போற்றி.
15. ஓம் உமையருட் செல்வா போற்றி.
16. ஓம் உயர்மறைப் பொருளே போற்றி.
17. ஓம் எஃக வேலுடையாய் போற்றி.
18. ஓம் எமபயம் நீக்குவாய் போற்றி.
19. ஓம் எழில் அற்புதனே போற்றி.
20. ஓம் ஏறுமயில் ஏறி போற்றி.
21. ஓம் ஔவைக் கரசே போற்றி.
22. ஓம் ஒப்பில்லா இறைவா போற்றி.
23. ஓம் ஓங்காரப் பொருளே போற்றி.
24. ஓம் கந்தா முருகா போற்றி.
25. ஓம் கடம்பா இடும்பா போற்றி.
26. ஓம் கங்கையின் மைந்தா போற்றி.
27. ஓம் கதிர்காமக் கந்தா போற்றி.
28. ஓம் கவிமாலை அணிந்தாய் போற்றி.
29. ஓம் கார்த்தி கேயனே போற்றி.
30. ஓம் காவற் காரனே போற்றி.
31. ஓம் காவடி விருப்பனே போற்றி.
32. ஓம் குகனென் நின்றாய் போற்றி.
33. ஓம் கும்பமுனிக் குருவே போற்றி.

34. ஓம் குமரகிரி வாசனே போற்றி.
35. ஓம் குராவடி வேலனே போற்றி.
36. ஓம் குறத்திக் கோவே போற்றி.
37. ஓம் குறிஞ்சிக் கிழவா போற்றி.
38. ஓம் குன்றம் எறிந்தோய் போற்றி.
39. ஓம் குன்றுதோ றாடுவாய் போற்றி.
40. ஓம் கூத்தன் மைந்தா போற்றி.
41. ஓம் கூத்தாடு மயிலோய் போற்றி.
42. ஓம் கொற்றவை குமரா போற்றி.
43. ஓம் கொற்றத்தனி வேலோய் போற்றி.
44. ஓம் கோலமயில் குமரா போற்றி.
45. ஓம் கோரும்வரம் தருவாய் போற்றி.
46. ஓம் சங்கப் புலவா போற்றி.
47. ஓம் சரவண பவனே போற்றி.
48. ஓம் சண்முகக் குமரா போற்றி.
49. ஓம் சகல நலம் அருள்வாய் போற்றி.
50. ஓம் சிவகுரு நாதா போற்றி.
51. ஓம் சிவசுப்பிர மணியா போற்றி.
52. ஓம் சீரலைவாய்த் தேவே போற்றி.
53. ஓம் சூர் முதல் தடிந்தாய் போற்றி.
54. ஓம் செஞ்சுடர் வேலா போற்றி.
55. ஓம் செவ்வேள் பரமா போற்றி.
56. ஓம் செந்தில் வாழ்வே போற்றி.
57 ஓம் செந்தமிழ்ச் செல்வா போற்றி.
58. ஓம் செங்கோட்டு வெற்பா போற்றி.
59. ஓம் சேவற் கொடியாய் போற்றி.
60. ஓம் சேந்தா முருகா போற்றி.
61. ஓம் சைவக் கொழுந்தே போற்றி.
62. ஓம் ஞானச் சுடரே போற்றி.
63. ஓம் ஞானப் பழமே போற்றி
64. ஓம் தங்க வேலனே போற்றி.
65. ஓம் தமிழ்மா மறையே போற்றி.
66. ஓம் தண்டாயுதபாணியே போற்றி.
67. ஓம் தமிழெனும் அழகே போற்றி.
68. ஓம் திகழ்மணி மார்பா போற்றி.
69. ஓம் திகழ்மயில் வாகனா போற்றி.
70. ஓம் திருச்செந் தூரா போற்றி.
71. ஓம் திருப்பரங் குன்றா போற்றி.
72. ஓம் திருஆவி னன்குடியாய் போற்றி.
73. ஓம் திருவே ரகக்குருவே போற்றி.
74. ஓம் திருத்தணிகைத் தமிழே போற்றி.
75. ஓம் திருப்புகழ் விருப்பா போற்றி.
76. ஓம் திருமால் மருகா போற்றி.
77. ஓம் திருவருட் செல்வா போற்றி.
78. ஓம் தீமையைத் தீர்ப்பாய் போற்றி.
79. ஓம் துங்கக் கொடையோய் போற்றி.
80. ஓம் தூ மறைக்கு ஆதி போற்றி.
81. ஓம் தெய்வானை கணவா போற்றி.
82. ஓம் தேவர்தம் கோவே போற்றி.
83. ஓம் நக்கீர நாயகா போற்றி
84. ஓம் நற்றமிழ் வேந்தே போற்றி.
85. ஓம் பழநிமலை வாழ்வே போற்றி.
86. ஓம் பழமுதிர் சோலையாய் போற்றி.
87. ஓம் பன்னிரு தோளாய் போற்றி.
88. ஓம் பதினெண்கண் மலர்ந்தாய் போற்றி.
89. ஓம் பிணிமுகம் ஏறுவாய் போற்றி.
90. ஓம் பிணிக்குலம் ஒட்டுவாய் போற்றி.
91. ஓம் பிரவணம் மொழிந்தாய் போற்றி.
92. ஓம் பிரமனைக் குட்டினாய் போற்றி.
93. ஓம் பிறவா நெறி அருள்வாய் போற்றி.
94. ஓம் மலைமகள் மகனே போற்றி.
95. ஓம் மன்றாடி மைந்தா போற்றி.
96. ஓம் மாயோன் மருகா போற்றி.
97. ஓம் முத்தமிழ் முருகா போற்றி.
98. ஓம் முத்தைய வேளே போற்றி.
99. ஓம் முருகெனும் அழகே போற்றி.
100. ஓம் முருகாற்றுப் படையோய் போற்றி.
101. ஓம் மூவர்க்கும் முதல்வா போற்றி.
102. ஓம் வள்ளி நாயகனே போற்றி.
103. ஓம் வழித்துணைக் குழகா போற்றி.
104. ஓம் விழித்துணை அழகா போற்றி.
105. ஓம் வெற்றிவேல் முருகா போற்றி.
106. ஓம் வேடர்தம் மருகா போற்றி.
107. ஓம் வையச் சுடரே போற்றி.
108. ஓம் வைர வேல் வீரா போற்றி போற்றி ஓம்!

## பாடல் - முருகப் பெருமான்

அஞ்சு முகம்தோன்றின் ஆறுமுகம் தோன்றும்
வெஞ்சமரில் அஞ்சலென வேல்தோன்றும் -
- நெஞ்சில்
ஒருகால் நினைக்கின் இருகாலும் தோன்றும்
முருகாஎன் றோதுவார் முன்.

## வாழ்த்துடன் பிரசாதம் அளித்தல்

அருள்மிகு முருகப்பெருமான் அருள் முழுமையாக உங்களுக்குக் கிடைப்பதாகுக. உங்களின் எல்லா விருப்ப மும் நிறைவேறுக. மங்களம் உண்டாகுக.

★★★

# கந்தர் சஷ்டி விழா

- செவ்வேள்

தமிழக மக்களால் கொண்டாடப்பெறும் சமய விழாக்கள் பலவற்றில், 'கந்தர் சஷ்டி விழா' என்பது, மிக்க சிறப்புடையதொன்றாகும். முருகப் பெருமான், சூரபதுமன் முதலிய அசுரர்களைக் கொன்று தேவர்களையும் முனிவர்களையும், பிற எல்லா உலகத்து உயிர்களையும் பாதுகாத்துச் செய்தருளிய தண்ணளியினை மிகவும் நினைத்து வியந்து நன்றியுடன் போற்றி வழிபடும் விழாவே, கந்தர்சஷ்டி விழாவாகும். ஐப்பசி மாதத்தில், வளர்பிறையில் முதல் ஆறு நாட்களில், தேவர்களும் முனிவர்களும் முருகனின் திருவருட்டிறத்தினைப் பெரிதும் போற்றி, நன்றியுணர்வுடன் வழிபடுவாராயினர். அவர்கள் வழிபட்ட அந்த ஆறு நாட்களில் கொண்டாடப் பெறும் விழாவே கந்தர் சஷ்டி விழாவாகும்.

''வெற்பொடும் அவுணன் தன்னை  
வீட்டிய தனிவேற் செங்கை  
அற்புதன் தன்னைப் போற்றி  
அமரரும் முனிவர் யாரும்  
சொற்படு துலையின் திங்கட்  
சுக்கில பக்கம் தன்னில்  
முற்பகல் ஆதி யாக  
மூவிரு வைகல் நோற்றார்!

*- கந்தபுராணம்*

செந்தமிழ் அன்பும் சிவநெறிப் பற்றும் உடைய முருகன் அடியார்கள் அனைவருக்கும், கந்தர் சஷ்டி விழா மிக்க புனிதமும் சிறப்பும் வாய்ந்ததாகும். தமிழகத்து உள்ள முருகன் தலங்களிலெல்லாம், பல்லாயிரக் கணக்கான அன்பர்கள் கந்தர் சஷ்டி விழாவில் நோன்பிருந்து முருகனைப் போற்றி வழிபட்டு மகிழ்வர். இத்தகைய கந்தர் சஷ்டி விழாவின் சிறப்பை விளக்கும் முறையில் உள்ள பின்வரும் ஓர் இலக்கியக் குறிப்பு, நாம் அறிந்து பெரிதும் மகிழ்தற்குரியது.

திரிகூட ராசப்பக்கவிராயர் என்பவர், ஏறத்தாழ 200 ஆண்டுகட்கு முன்பு இருந்தவர். பிற்காலக் கவிஞர்களுள் பெரிதும் சிறப்புற்றவர். அவர் இயற்றிய நூல்கள் பல. அவற்றுள் குற்றாலத் தலபுராணமும், குற்றாலக் குறவஞ்சியும் மிகவும் புகழ் பெற்றவை.

குற்றாலத் தலபுராணம், சொற் பொருட் சுவை நலங்கள் பலவும் துளும்பித் திகழ்வது; கற்றுவல்ல புலவர்களால் மிக்குயர்த்துப் போற்றப்படுவது.

'குற்றாலக் குறவஞ்சி' என்பதே, இயலிசை நாடகம் என்னும் முத்தமிழ்க்கும் நிலைக்களனாய் விளங்கி, எவரையும் மகிழ வைக்கும் மாட்சிமை உடையது.

குறவஞ்சி என்பது, குறத்தி ஒருத்தி குறி சொல்லுவது போலப் பாடப்படும் ஒரு சிறு பிரபந்தம். அப் பிரபந்தம் பொதுவான பலவகைச் செய்திகளோடு, குறவர் குறத்தியரின் செயல் இயல்களும் விளங்குமாறு, நாடகப் பாங்கு அமைய நன்கியைத்துப் பாடப்பெறும். அம்மறையை ஒட்டி வரும் ஒரு பகுதியில், குற்றாலக் குறவஞ்சியின் கண் கந்தர் சஷ்டி விழாவைப் பற்றிய குறிப்பு ஒன்றும், சுவைமிக வருகின்றது.

''வள்ளிக் குறத்தியை மணந்த முருகக் குறவன், முதல் வேட்டைக்குப் போனான். ஆறு நாட்கள் கழித்து அவனுக்கு ஒரு கொக்கு அகப்பட்டது. அக் கொக்கை அவித்து, ஒரு சட்டியில் அவன் சாறு (குழம்பு) வைத்தான். (புலாலை வெறுக்கும்) வேதப் பிராமணர், சைவர், முனிவர் ஆகிய எல்லோரும், கொக்கை அவித்த சட்டிச்சாறு (சூரபதுமனாகிய மாமரத்தை அழித்த கந்தர் சஷ்டி விழா) மிகவும் நன்றாக உள்ளது என்று ஏற்றுக் கொண்டனர்.''

''மீறும் இலஞ்சிக் குறத்தியைக் கொண்ட செவ்  
வேட்குறவன், முதல் வேட்டைக்குப்  
போன நாள்,  
ஆறுநாட் கூடி ஒரு கொக்குப் பட்டது;  
அகப்பட்ட கொக்கை அவித்து, ஒரு சட்டியில்  
சாறாக வைத்தபின் வேதப் பிராமணர்  
தாமும் கொண்டார்! சைவர் தாமும்  
கொண்டார்! தவப்  
பேறா முனிவரும் ஏற்றுக் கொண்டார்! இதைப்  
பிக்குச் சொல் லாமலே கொக்குப் படுக்கவே.''

*- குற்றாலக் குறவஞ்சி.*

இச் செய்யுளில் முருகனைக் 'குறவன்' என்ற பொருத்தமும், அவன் சூரபதுமனோடு செய்த போரினை 'முதல் வேட்டை' என்ற சிறப்பும் நயம் செறிந்தன. மேலும் இதன்கண்,

கொக்கு - பறவை, மாமரம்  
அவித்தல் - வேகவைத்தல், அழித்தல்  
சட்டி - மட்கலம், சஷ்டி

சாறு - குழம்பு, விழா,
வைத்தல் - காய்ச்சுதல், நிகழச் செய்தல்.

என இரு பொருட் குறிப்பு அமையும்படி வழங்கிய புலவரின் சொல்லாட்சித் திறனும், பெரிதும் போற்றத் தக்கதாகும்.

கந்தர் சஷ்டி விழா, வேதப் பிராமணர் சைவர் முனிவர் ஆகிய பெருமக்களெல்லாரும் மகிழ்ந்து ஏற்றுக் கொண்டாடிவரும் மாண்புடையது என் பதனை, இப்பாடலில் கவிஞர் இன்சுவை பொருந்த விளக்கியிருத்தல் காணலாம்.

கந்தர் சஷ்டி விழாவின் சிறப்பினை விளக்கும் முறையில், வேறு ஒரு தனிப்பாடலும் உண்டு. பண்டைக் காலத்தில் ஆசிரியர்கள் தம் மாணவர் களுக்குக் கவிதை இயற்றக் கற்றுக் கொடுப்பதற்காக அவ்வப்போது ஏதேனும் ஓர் ஈற்றடியைக் கொடுத்து, அதனை ஒட்டி ஏனைய மூன்று அடிகளை ஏற்றவாறு அமைத்துச், சிறந்த பொருள் அல்லது கருத்துப் பொருந்துமாறு செய்யுள் இயற்றும்படி பணிப்பர். இதனைச் சிலர் 'சமஸ்யை' என வழங்குவர்.

ஒரு நாள் ஓர் ஆசிரியர், தமது மாணவர் ஒருவருடன், ஒரு தெருவழியே சென்று கொண்டிருந் தார். அத்தெரு குயவர் தெரு. ஆதலின் அங்கே இருந்த பலரும், குடம் சட்டி முதலியன வனைந்து கொண் டிருந்தனர். அதனைக் கண்ணுற்ற ஆசிரியர் தமது மாணவரை நோக்கி விளையாட்டாக,

''குடத்தைப் பிடித்தவன் சட்டியை
நோக்கக் குறைவில்லையே''

என்னும் ஓர் ஈற்றடியைத் தம் உள்ளத்தில் உருவாக்கிக் கூறி, அதனை அமைத்து ஒரு செய்யுள் இயற்றும்படி கட்டளையிட்டார்.

உடனே மாணவர் அவ்வீற்றடிக்கு ஏற்ப முதல் மூன்றடிகளை யாத்து, குடம் சட்டி என்னும் சொற்களை நயம்பட அமைத்து, ஒரு செய்யுளை இயற்ற முற் பட்டார். கந்தர் சஷ்டி விரதத்தை நாம் அன்புடன் கடைப்பிடித்து, முருகனை வழிபட்டால், நமக்கு எல்லா நலங்களும் எய்துதல் திண்ணம், என்னும் சிறந்த பொருளை அமைக்க விரும்பினார்.

முருகன் கோழிக் கொடியை உடையவன். கோழி கூவினாற் பேய்கள் ஓடி மறைந்து ஒழியும்; இருளும் தீங்கும் நீங்கும். ஆதலின் வாழ விரும்புவோர் அனைவரும் கோழிக் கொடியைச் சிறப்பாகக் கொண் டுள்ள முருகனைத் தொழுது பணிதல் வேண்டும். இதனையே ''கோழிக் கொடியன் அடிபணியாமற் குவலயத்தே வாழக் கருதும் மதியிலிகாள்'' என்னும் கந்தரலங்காரப் பாடல் வரியால், அருணகிரிநாதர் அறிவுறுத்தினார். சேவலைக் கொடியாக உடைய முருகன் காப்பதனாலேயே, உலகத்திலுள்ள உயிர்கள் இன்பமாக வாழ்கின்றன.

''சேவலங் கொடியோன் காப்ப
ஏம வைகல் எய்தின்றால் உலகே''

என்பது குறுந் தொகைப் பாடல். இவற்றையெல்லாம் எண்ணினார் அம்மாணவர்! கோழிக்குக் குக்குடம் என்பது ஒர பெயர். ஆசிரியர் அளித்த ஈற்றடியில் உள்ள 'குடத்தைப் பிடித்தவன்' என்னும் தொடரைக் 'குக்குடத்தைப் பிடித்தவன்' என்று ஏற்ற பெற்றி இயைத்துப் பாடலை இயற்றி முடித்தார்.

குக்குடத்தை (கோழிக் கொடியை)ப் பிடித்த வன் (முருகன்); அவனது சட்டியை (சஷ்டி விரதத் தினை), நோக்க (அனுட்டித்து வர), குறைவில்லை (நமக்கு யாதொரு குறையும் நேராது)'' என்னும் அழகிய இனிய அரிய கருத்தினைப் புலப்படுத்தி, அதற்கு ஏற்ற எதுகை மோனை முதலிய செய்யுள் உறுப்புக்களைத் தக்கவாறு பொருத்தி, அம்மாணவர் கட்டளைக் கலித்துறைச் செய்யுள் ஒன்றைக் கவினுறப் பாடிக் காட்டினார்.

கந்தர் சஷ்டி விரத வழிபாட்டின் பயனை வலி யுறுத்தும் சுவை மிகுந்த அந்தச் செய்யுள் யாவரும் அறிந்து மகிழற்பாலது.

கடத்தைப் பழித்துக் களபம்
திமிர்ந்து கனகமணி
வடத்தைத் தரித்துச் சுணங்கு
படர்ந்தொளிர் வள்ளிதன்
தடத்தைத் தழுவும் தனது
மலர்க்கைத் தலத்தினில், குக்
குடத்தைப் பிடித்தவன் சட்டியை
நோக்கக் குறைவில்லையே
- *தனிப்பாடல்*

இச் செய்யுளில் குடம் என்பதனைக் குடம் என்பதனைக் குக்குடம் எனவும், சட்டி என்பதனைச் சஷ்டி என்னும் சொல்லின் தமிழ் வடிவமாகவும் ஏற்ற பெற்றி அமைத்து, இனிய செய்யுள் ஒன்றைக் கவிஞர் இயற்றியுள்ள திறம் மிகவும் வியந்து இன்புறற் பாலது.

''சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே'' எனப் பாடினார் பாரதியார். மனிதன் கையாளும் கருவிகளுள், மிக்க சிறப்பும் ஆற்றலும் உடைய கருவி, சொல்லே யாகும். 'வில்லம்பிற் சொல்லம்பு வீறுடைத்து' என்பது

பழமொழி. சொற்களை நாம் திறனறிந்து கையாளுதல் வேண்டும். ஒருவனுக்குத் தான் பேசும் சொல்லினா லேயே ஆக்கமும் கேடும் வருதல் கூடும். அத னாலேயே திருவள்ளுவர் 'திறனறிந்து சொல்லுக சொல்லை' என்றும், ''காத்து ஓம்பல் சொல்லின்கட் சோர்வு'' என்றும் அறிவுறுத்தி அருளுவாராயினர்.

'வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்' என்பது பழமொழி. சிறந்த அறிஞர்கள் எளிய இயல்பான சொற்களையும்; சிறந்த உயர்ந்த பொருள்கள் பயக் கும்படி திறம்படக் கையாளுவர். சிறந்த அறிஞர்களின் புலமை மதிநலத்தால், இரச வேதியால் இழிந்த இரும்பும் உயர்ந்த பொன்னாக மாறி மின்னுதலைப் போல, எளிய சிறு சொற்களும், அரிய பொருள்களை உணர்த்தும் ஆற்றலைப் பெறும்.

'சட்டி' 'அகப்பை' என்னும் சொற்கள் சாதாரண எளிய சிறு சொற்களே ஆகும். எனினும், இவற்றின் வாயிலாக உயர்ந்த கருத்தை நம் தமிழ் முன்னோர்கள் உணர்த்தியுள்ளனர்.

ஒரு நாட்டின் சிறப்பையும் நாகரிகத்தையும் விளக்கும் சான்றுகள் பலவற்றுள் அந்நாட்டில் வழங்கி வரும் பழமொழிகளும் சிறப்பிடம் பெறுகின்றன. பழமொழிகள் மிகுந்திருத்தல், மொழியின் வளத்தை யும் செழிப்பையும் உணர்த்துவதாகும். நம் முன் னோர்களின் அறிவார்ந்த அனுபவக் கருத்துக்களின் திரட்சியே, பழமொழிகள் வடிவில் அமைந்து, பின் னோர்களாகிய நமக்குப் பெரும்பயனை விளைப்பன வாக வழங்கி வருகின்றன.

தமிழில் வழங்கி வரும் பழமொழிகளில், ''சட்டியில் இருந்தால்தானே அகப்பையில் வரும்'' என்பது ஒன்று. மேல் நோக்காகக் காண்பதற்கு இஃது ஏதோ ஒரு சாதாரணமான, சிறப்பில்லாத பழமொழி போல நமக்குத் தோன்றும். இப் பழமொழியைக் கேட் குங்கால், வெறும் சட்டியும் அகப்பையும் மட்டுமே நம் நினைவிற்கு வரும்.

இந்நூற்றாண்டின் முதற்பாதியில் தன்னிக ரற்ற சான்றோராக விளங்கித் தமிழையும் சமயத் தையும், தமது சமரச சன்மார்க்கச்சான்றாண்மைச் சொர் பொழிவுகளால் வளர்த்தருளியவர், திருக்கோவலூர் ஆதீனம் திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் மடாலயத் தின் ஐந்தாம் அருட் குரவராகிய சீலத்திரு சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள் *(1873 - 1942)* அவர்களாவர். அப் பெருந்தகையார் 'சட்டியில் இருந் தால் அகப்பையில் வரும்' என்னும் சாதாரணப் பழமொழிக்குப் பின்வருமாறு பொருள் விளக்கம் கூறியருள்வார்.

''சட்டியில் (சஷ்டியில்), இருந்தால் (விரதம் இருந்து வழிபட்டால்), அகப்பையில் (அகமாகிய வயிற்றின் கண் உள்ள கருப்பையில்), வரும் (மகப் பேறு வாய்க்கும்)''

என்பது, அவர்கள் அவ்வப்போது விளக்கி மகிழ்விக்கும் சிறந்த இனிய பொருளாகும்.

இச்சிறந்த இனிய பொருளை விளக்கி வலி யுறுத்தித் தெளிவுறுத்தும் சான்றுகளாக, அவர்கள் பரிபாடல், பெரிய புராணம் என்னும் நூல்களில் இருந்து, சிறப்பாக இரண்டு மேற்கோள்களை, எடுத்துக் காட்டுவதுண்டு. பரிபாடல் என்னும் சங்க நூல்,

''வருபுனல் அணிகென வரங்கொள் வோரும்
கருவயிறு உறுகெனக் கடம்படு வோரும்
செய்பொருள் வாய்க்கெனச் செவிசார்த்துவோரும்
ஐயமர் அடுகென அருச்சிப் போரும்''

ஆகிய மிகப் புலர், திருப்பரங்குன்றில் முருகனை வழிபடுதலைக் குறிப்பிடுகின்றது.

முருகனை வழிபட்டே, கண்ணப்ப நாயனா ரைத் தம் புதல்வராகப் பெற்றெடுக்கும் பெரும்பேறு எய்தினர், அவர்தம் தாய் தந்தையர் ஆகிய நாகனும் தத்தையும்!

''பொருவரும் சிறப்பின் மிக்கார்
இவர்க்கினிப் புதல்வர்ப் பேறே
அரியதென் றெவரும் கூற
அதற்படு காத லாலே
முருகலர் அலங்கற் செவ்வேல்
முருகவேள் முனறிற் சென்று
பரவுதல் செய்து நாளும்
பராய்க்கடன் நெறியில் நிற்பார்''

எனவரும் பெரிய புராணப் பாடல், இதனை வற்புறுத்தும்.

இதனால் கந்தர் சஷ்டி விரதத்தின் பயனையும், விழாவின் சிறப்பினையும் நாம் அனைவரும் நன் கினிது உணரலாம். செந்தமிழ்க் கடவுளாகிய முருகனுக் குச்சிறந்த இவ்விழாநாட்களில், நாம் அப்பெருமானை அன்புடன் வழிபட்டு நலம் பலவும் அடைவோமாக!

★★★

# இந்து சமய அறநிலையத்துறை

பெறுநர்

திருமிகு ச. மெய்கண்ட தேவன் இ.ஆ.ப.
ஆணையாளர்,
இந்துசமய அறநிலைய ஆட்சித் துறை,
சென்னை - 600 034.

1. அனைத்து இணை ஆணையர்கள்.
2. ,, இணை ஆணையர் / செயல் அலுவலர்கள்
3. ,, துணை ஆணையர் / செயல் அலுவலர்கள்
4. ,, உதவி ஆணையர்கள்.
5. ,, உதவி ஆணையர்/ செயல் அலுவலர்கள்.

**சுற்றறிக்கை ந.க.எண். 73926/98/ஒய். 2. நாள் 24.8.98.**

ஐயா,

**பொருள் :** திருக்கோயில் தீர்த்தக்குளங்கள் - திருக்குளங்களின் அருமையும் பெருமையும் உணர்தல் - திருக்குளங்களை போற்றிப் பாதுகாத்தல் - தொடர்பாக.

★★★

''மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாய்த்
தொடங்கினர்க்கோர்
வார்த்தைசொலச் சற்குருவும் வாய்க்கும்
பராபரமே''

என்பது தாயுமானவர் திருப்பாடல் ஆகும்.

திருக்கோயிலும், திருக்கோயிலில் அமைந்து விளங்கும் மூர்த்திகளையும் போலவே தீர்த்தங்களும் மகிமைமிக்கவை என்பதனையே தாயுமானவசுவாமிகள் மேற்காணும் பாடலில் அறிவுறுத்தியுள்ளார்கள்.

இறைவனே தீர்த்தங்களாகவும் அமைந்து அருள்பாலிக்கின்றான் என்பதை அப்பர் பெருமான்

''சென்றாடும் தீர்த்தங்கள் ஆனார் தாமே''

என்ற தொடரால் தெளிவுபடுத்தியிருக்கக் காண்கிறோம்.

''தீர்த்தனைப் பூம்பொழில் சூழ்
திருமாலிருஞ்சோலை நின்ற
மூர்த்தியை'' என்று திருமங்கை ஆழ்வாரும் அருளிச் செய்துள்ளார்.

தீர்த்தத் திருக்குளம் என்பது அம்மையும் அப்பனும் ஒருசேரக்கொண்டு விளங்கும் அருள்வடிவம் என்பதை மாணிக்கவாசக சுவாமிகள்

''அங்கங்குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கள் மலங்கழுவுவார் வந்து
சார்தலினால் எங்கள் பிராட்டியும்
எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடு''

என்று திருவெம்பாவையில் தெளிவுபடுத்தியிருக்கக் காண்கின்றோம்.''

ஒரு சில வைணவத் திருத்தலங்கள் அங்கு அமைந்துள்ள தீர்த்தங்களின் பெயராலேயே அமைந்துள்ளன.

1. அல்லி மலர்கள் நிறைந்த கேணி உடையவர் ஆகையாலே திருவல்லிக்கேணி அங்குள்ள தீர்த்தத்தின் பெயரால் அமைந்த ஊர்.
2. சீர்காழிக்கு அருகிலுள்ள அண்ணன்கோயில் என்ற திருத்தலம் ஆழ்வாரால் 'திருவெள்ளக்குளம்' என்ற திருப்பெயராலேயே மங்களாசாசனம் செய்யப் பெற்றுள்ளது. (திருமங்கையாழ்வார் பெரிய திருமொழி 4, 9 பதிகம்)
3. திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள பெருங்குளம். இத்தலத்து எம்பெருமானையே நம்மாழ்வார் ஒரு குளமாக (தடம்) மங்களாசாசனம் செய்துள்ளார். (திருவாய்மொழி 8-5-1)

4. 'திருமாலிருஞ்சோலை மலையில்பெரிய தீர்த் தத்தை ஆழ்வார்கள் பலர் மங்களாசாசனம் செய்துள்ளனர்.

திருக்கண்ணபுரத்தையும் அவ்வாறே, 'கங்கை யிலும் தீர்த்தமலி கணப்புரத்தென் கருமணியே. (பெருமாள் திருமொழி 8-3) என குலசேகரர் பாடி யுள்ளார்.

திராத வினைகளை எல்லாம் தீர்த்து வைப் பதுவும், உடற்பிணியோடு, உளப்பிணிகளும், பிறவிப் பிணியும் தீர அருள் செய்வனவும் தீர்த்தங்களே ஆகும்.

''ஆர்த்த பிறவி துயர்கெட நாம் ஆர்த்தாடும்
தீர்த்தன்''

என்பதும் திருவாசகத் தொடராகும்.

இறைவனின் ஐந்தெழுத்தாகிய மந்திரத்தைப் போன்றது திருக்கோயில் தீர்த்தங்கள் என்பதை சைவ எல்லப்பநாவலர் அருளியுள்ள தீர்த்தகிரிப்புராணம் பின்வரும் பாடலால் தெளிவுப்படுத்தியுள்ளது.

''சிந்தையின் அழுக்கினைப் பிணியினை
சேற்றினைக் கொந்தவிழ்
வறுமையைப் பிறவிக்குப்பையை
ஐந்தொரு எழுத்தலால்
அகற்ற வேறொரு மந்திரம் இலை எனின்
வருக தீர்த்தமே''

என்பது தீர்த்தமகிமை கூறும் அரிய பாடலாகும்.

உமையன்னை அருளிய ஞானப்பால் உண்ட ஞானத்தின் திருவுருவான திருஞான சம்பந்தரும் தீர்த்தங்கள் விளைக்கும் அற்புதப் பலன்களைத் தொகுத்துப்

''பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினோடு
உள்ளம் நினை
வாயினவே வரம்பெறுவர் ஐயுற
வேண்டா ஒன்றும்
வேயனதோள் உமைபங்கன் வெண்காட்டு
முக்குளநீர்
தோய்வினையார் அவர்தம்மைத்
தோயாவாம் தீவினையே''

என்று பாடியிருக்கக் காண்கின்றோம்.

புண்ணிய பதினாறாண்டு பேர் பெறும் புகலி வேந்தர்தம் வாக்கு புண்ணியவாக்கே என்பதை இத் திருவெண்காட்டு முக்குளநீரில் தோய்ந்த புண்ணியத் தால் பிள்ளைப்பேறு இல்லாதிருந்த அச்சுதக்களப் பாளர் எனும் சிற்றரசருக்குக் கி.பி.13-ம் நூற்றாண்டில் ''காசினிமேல் வந்த அருட்கதிரோன்'' ஆக மிகு சைவ நாதனாகிய மெய்கண்டதேவன் தோன்றிப் பொய் கண்டார் காணாப் புனிதமெனும் சிவஞானபோத சாத்திரநூலை உலகுய்ய பாடியருளிய அருள் வரலாற் றால் நாம் அறியலாம்.

மாபாதகமும் தீர்க்கும் மதுரை பொற்றாமரைத் தீர்த்தத்திற்கு ஆதிதீர்த்தம், பரம தீர்த்தம், ஞானதீர்த்தம், முத்தி தீர்த்தம், உத்தம தீர்த்தம் எனப் பல்வேறு பெயர் கள் இருப்பதைத் திருவிளையாடல் புராணம் நமக்கு உணர்த்துகின்றது.

இராமேஸ்வரத்தில் உள்ள கோடி தீர்த்தத்தில் நீராடினால் கோடி புண்ணியம் பெறலாகும். காசியில் 10 மாதங்கள் தங்கிய பலனையும், சிதம்பரத்தில் 10 மாதங்கள் தங்கிய பலனையும், குடந்தை, திருவிடை மருதூர், மயிலாடுதுறை, திருவெண்காடு, மதுரை, திருவானைக்காவல், திருமறைக்காடு, திருவரங்கம், திருமுதுகுன்றம், திருவாரூர், சீர்காழி, வைத்திஸ்வரன் கோயில் போன்ற புண்ணியதலங்களில் ஓராண்டுக் காலம் தங்கிய பலனையும் கோடி தீர்த்தத்தில் நீராடு வதன் வாயிலாகப் பெற்றுச் சிறக்க முடியும் என்று சேதுப்புராணம் நமக்குக் கூறுகின்றது.

புண்ணிய தீர்த்தங்களில் நீராடியவரின் உடலி லிருந்து ஒன்றிரண்டு துளிகள் மற்றவர்கள்மேல் பட்டாலும் அவர்களுக்கும் பாவம் தீர்ந்து வீடுபேறு உண்டாகும். தீர்த்தங்களின் மேல்பட்ட காற்று பரவி வீசும் இடங்களில் வாழ்பவர்க்கெல்லாம்கூட முக்தி கிட்டுவது திண்ணம் என்று தலபுராணம் பேசுகின்றது.

இத்தகைய அருமையும் பெருமையும் மிக்க திருக்கோயில் தீர்த்தக்குளங்களைப் பொன்னே போல் போற்றிப் பாதுகாக்க வேண்டுவது நம்கடமை அல்லவா.

''தங்கள் மலம் கழுவுவார் வந்து சார்தலினால்'' என்ற தொடரால் மாணிக்கவாசக சுவாமிகள் ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலத் தூய்மை செய்வன தீர்த்தங்கள் என்று அறிவுறுத்தினாரே தவிர உடல் அழுக்கும், உடை அழுக்கும், பிற அழுக்கும் நீக்கப் பயன்படுத்துக திருக்குளங்களை - தீர்த்தக்குளங் களை என்று கூறினாரில்லை.

ஆகவே பாவங்கள் தீர்ப்பனவும், புண்ணி யங்கள் சேர்ப்பனவுமான தீர்த்தங்களைப் போற்றிக் காக்க - அவற்றின் தூய்மையைக் காத்து முறையுடன் அவற்றை மெய்யன்பர்கள் பயன்படுத்த ஆவன செய்ய வேண்டுமென இணை ஆணையர்களுக்கு அறி வுறுத்தப்படுகின்றது.

## அறநிலையத்துறையின் வெளியீடுகள்

**தலபுராணங்கள்**

அருணாசலப் புராணம்
பழநித்தல புராணம்
திருச்செந்தூர் தலபுராணம்
செவ்வந்திப் புராணம்
(தாயுமான சுவாமி தலபுராணம்)
திருப்பரங்கிரி புராணம்
அவிநாசிப் புராணம்
சென்னிமலை தலபுராணம்
சிவன்மலை புராணம்
திருமுருகன் பூண்டி புராணம்

**சிற்றிலக்கியங்கள்**

மதுரை மீனாட்சி அம்மைப் பிள்ளைத் தமிழ்
திருவருணைக்கலம்பகம்
உண்ணாமுலைப் பிள்ளைத்தமிழ்
திருத்தணிகைப் பிள்ளைத்தமிழ்
திருத்தணிகை ஆற்றுப்படை

ஆகிய நூல்கள் வெளிவந்துள்ளன. இந்நூல்கள் அந்தந்தத் திருக்கோயில்களில் விற்பனைக்குக் கிடைக்கும்.

மேலும் இந்நூல்களைப் பழநி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமித்திருக்கோயில் விற்பனை நிலையம், மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில் விற்பனை நிலையம், இராமேஸ்வரம் அருள்மிகு இராமநாத சுவாமித் திருக்கோயில் விற்பனை நிலையம், சென்னை மயிலை அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயில் விற்பனை நிலையம் ஆகிய இடங்களிலும் விற்பனைக்குக் கிடைக்க ஆவன செய்யப்பட்டுள்ளது.

மெய்யன்பர்கள் இந்நூல்களை வாங்கிப் படித்துப் பயன்பெறக் கேட்டுக் கொள்கின்றோம்.

தீர்த்த மகிமைகளைக் கல்வெட்டுகளில் பொறித்து மெய்யன்பர்களின் பார்வைக்கு வைக்கதக்க நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்படுகின்றது. தலபுராணங்களில் தீர்த்தப்பெருமை பற்றிப் பல வாறாக புகழ்ந்து பாடப்பட்டிருப்பதை மனத்திலிருத்தல்வேண்டும். அப்பாடல்களில் சிலவற்றையாவது கல்வெட்டுகளில் பதிக்கவேண்டும்.

திருக்கோயில் தீர்த்தக்குளங்களை அதன் அருமை அறியா சிலர் அசுத்தப்படுத்த ஒரு சிறிதும் அனுமதிக்காமல் கண்காணித்துக் காத்திட திருக்கோயில் காவலர்களுக்கு அறிவுறுத்தப்படுகின்றது.

''தீங்கு தீர்க்கும் நல் தீர்த்தங்கள் போற்றும்'' என்று அறிவுறுத்தியுள்ளார் தெய்வச் சேக்கிழார் பெருமான். அவரே

''ஈண்டு தீவினையாவையும் நீக்கி இன்பமே
தரும் புண்ணிய தீர்த்தம்
வேண்டினார் தமக்கு இட்ட சித்தியதாய்
விளங்கு தீர்த்தம், நன்மங்கல
தீர்த்தம் நீண்ட காப்புடைத் தீர்த்தம்''

என்று தீர்த்த மகிமையைப் போற்றிப் பரவியுள்ளமையை ஒவ்வொருவரும் தத்தம் உள்ளத்தில் பதித்துக்கொண்டு திருக்குளத் தீர்த்தங்களைப் போற்றிப் பாதுகாக்க தக்க நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்படுகின்றது.

தீர்த்தத்தின் பெருமையை அறிகின்றபோது மக்கள் அவற்றைத் தூய்மை கெடச் செய்யமாட்டார். மேலும் பாதுகாத்திட தங்கள் கைப்பொருளை அன்பளிப்பாக வழங்கிப் புண்ணியம் பெறுவர். இதைக் கருத்தில் கொண்டு அனைத்துச்செயல் அலுவலர்களும் செயல் படவேண்டும். இதற்கான தக்க அறிவுரைகளை இணை ஆணையர்கள் தங்கள் கட்டுப்பாட்டில் செயல்படும் செயல் அலுவலர்களுக்கு உடன் வழங்கி, திருக்குளங்களைப் பேணிட வழிசெய்திடவேண்டும்.

இச்சுற்றறிக்கை கிடைக்கப்பெற்றதற்கான ஒப்புதலை உடன் அனுப்பிவைக்க கேட்டுக் கொள்ளப் படுகின்றது.

**ச. மெய்கண்டதேவன்,**
**ஆணையர்.**

# திருக்குளத் திருப்பணித் தொண்டர்

- முனைவர் த. அமிர்தலிங்கம்

தொலைக்காட்சியில் அண்மையில் ஒரு செய்திப்படத்தைப் பார்த்தேன். ஜனநெரிசல் மிக்க ஒரு சாலையில் மக்கள் பலர் போய்க்கொண்டும் வந்து கொண்டும் இருக்கிறார்கள். சாலையின் மையப்பகுதியில் கிடக்கும் கல்லொன்று பலரைத் தடுக்கிவிழச் செய்கின்றது. கண்ணிருந்தும் பலர் அக்கல்லைப்பற்றிக் கவலைப்படாமல் போய்க்கொண்டு இருக்கும் போது கையில் கோலை ஊன்றி நடக்கும் குருடர் ஒருவர் தம்மைத் தடுத்தது எது என்று கீழே குனிந்து பார்த்து, மக்கள் நடமாட்டத்திற்குத் தடையாய் உள்ள அக்கல்லை, எடுத்துப்போய் யாருக்கும் இடையூறின்றி ஒரு ஓரத்தில் வீசிஎறிவதைக் காட்டிய அச்செய்திப்படம் 'யார் குருடர்கள்?' என்ற கேள்வியைக் கேட்டு கண்ணிருந்தும் கடமை ஆற்றாதவர்களே குருடர்கள் என்ற உயர்ந்த உண்மையை நமக்கு எடுத்துக்காட்டியது.

இந்தச் செய்திப் படத்திற்கும், இப்போது நாம் காணப்போகும் தண்டியடிகள் நாயனார் வரலாற்றிற்கும் மிக நெருக்கமானதொடர்பு இருக்கிறது. தண்டி நாயனாரும் பிறவியிலேயே குருடர். பிறக்க முத்தி தரும் திருவாரூர் திருத்தலத்திலே பிறந்தவர். சிவ பெருமானின் திருவடிகளையே எஞ்ஞான்றும் அகத்தே கண்டு உருகும் ஆர்வநெஞ்சினர். புறத்தே உள்ள மற்றைப் பொருட்களைக் காணும் பற்றினைத் துறந்தவர்போல் பிறக்கும் போதே கண்கள் இன்றிப் பிறந்தார் தண்டிநாயனார் என்று சேக்கிழார்

''தண்டியடிகள் திருவாரூர்ப் பிறக்கும்
பெருமைத் தவமுடையார்
அண்டவாணர் மறைபாட ஆடும்
செம்பொற் கழல் மனத்துக்
கொண்ட கருத்தின் அகநோக்கும்
குறிப்பேயன்றிப் புறநோக்கும்
கண்டஉணர்வு துறந்தார்போற் பிறந்த
பொழுதே கண்காணார்''

எனப் பாடுகிறார்.

சிவபெருமானைக் காணும் கண்களே கண்கள்; காணாதவை கண்கள் அல்ல, புண்கள் என்பது தண்டி நாயனார் எண்ணம். அகக்கண்களால் திருவாரூர் தியாகேசனை நாளும் பணிந்து திருவாரூர் தியாகேசர் திருத்தொண்டிலேயே தம்முடைய வாழ்நாட்களைப் போற்றி வந்தார் அவர்.

திருவாரூர் கோயிலும், குளமும், ஓடையும் முறையே ஐயைந்து வேலிப் பரப்புடையனவாகும். தம்முடைய நாமணக்க, 'நமச்சிவாய, நமச்சிவாய' என மந்திரத்தை நாளும் ஓதி இலக்குமி தவம் செய்த கமலாயத்தீர்த்தக் குளத்தில் நீராடி, தியாகேசரை வழிபட்டுத் திருக்கோயிலை வலம் வந்து மாறாத பக்தி செய்து வந்தார் தண்டி நாயனார். அவ்வாறு பக்தி செய்துவரும் நாளில் திருக்குளத்தின்பரப்பு நாளுக்கு நாள் சுருங்கிக்கொண்டு வருவதை உணர்ந்துகொண்ட தண்டிநாயனார் அதன்காரணத்தை அறிந்து உளம் பதைத்தார்.

கமலாலயத் திருக்குளத்தில் நீரைத் தூர்த்து, சமணர்கள் அங்கெல்லாம் தங்கள் மடங்களையும் பாழிகளையும் அமைத்துவரவே, திருக்குளத்தின் பரப்பு நாளுக்கு நாள் சுருங்கி வரலாயிற்று. சுய நலத்துக்காக சமணர்கள் இவ்வாறு திருக்குளத்தை ஆக்கிரமித்துத் தங்கள் சொந்த இடங்களாக அவற்றை அமைத்துவந்த செயலே தண்டி நாயனாரைத் துடிக்க வைத்தது. சைவ சமயத்திற்கும், சிவாலயத்திற்கும் பெருங்கேடு சூழும் சமணர்கள் செயலைக் கண்டும் காணாதவர்களாய் விழிபடைத்த மற்றவர்கள் எல்லாம் வாளா இருந்தபோதுதான் விழிஇழந்த தண்டி நாயனார் தாம் துடிதுடித்து, திருக்குளத்தைச் சமணர்களிடம் இருந்து மீட்க என்ன வழி என்பதாகச் சிந்தித்தார்.

திருக்குளத்தின் தூர் வாரி, திருக்குளத்தை ஆழப்படுத்துவதன் மூலமே திருக்குளத்தின் நீரும் வற்றாமல் நிறைந்திருக்கும். அதனால் சமணர்கள் மேலும் மேலும் பாழிகளை அமைப்பதைத் தடுக்கலாம் என்று முடிவு செய்த தண்டி நாயனார் தமக்கு விழிகள் இல்லையே என்று கவலைப்படாமல், மற்றவர்களின் துணையையும் கூட வேண்டாமல் தாமொருவராகவே திருக்குளத்தில் இறங்கித்தூர் வார ஆரம்பித்தார்.

திருக்குளத்தில் இறங்கிய தண்டி நாயனார்தாம் தோண்ட வேண்டிய இடத்தில் ஒரு கோலை நட்டுக் கொண்டார். திருக்குளத்தின் கரையில் மற்றொரு கோலை நட்டு இரண்டு கோல்களையும் கயிறு கொண்டு இறுகப் பிணித்துக்கொண்டார். அஞ்செழுத்தை ஓதியவாறு மண்வெட்டிகொண்டு மண்ணைத் தோண்டினார். தோண்டிய மண்ணைக் கூடையில் வாரினார். இரு கோல்களைப் பிணைத்திருக்கும் கயிற்றினைத் தடவியவாறே கரைக்கு வந்து மண்ணைக் கொட்டினார். பிறகு மறுபடியும் குளத்தின் உட்

பகுதிக்குச் சென்று தோண்டினார். இவ்வாறு ஒப்பற்ற திருக்குளத்திருப்பணித் தொண்டில் தம்மை ஈடுபடுத் திக் கொண்டார் தண்டி நாயனார்.

''குழிவாய் அதனிற் குறிநட்டுங் கட்டும்கயிறு
குளக்கரையில்
இழிவாய்ப் புறம் நடுதறியோ டிசையக்
கட்டி இடைத்தடவி
வழியால் வந்து மண்கவ்வி யெடுத்து
மறித்துத் தடவிப்போய்
ஒழியா முயற்சி யாலுய்த்தார் ஒதுமெழுத்
தஞ்சுடன் உய்ப்பார்''

*- தண்டியடிகள் நாயனார் புராணம் 15.*

விழிகள் அற்ற நிலையிலும் தண்டிநாயனார் ஆற்றிய இத்திருப்பணியைப் பாராட்ட சைவஅடி யார்கள் அப்பொழுது யாரும் முன்வரவில்லை. ஆனால் சமணர்கள் பலர் தண்டி நாயனாரின் திருப் பணியைத் தடுத்திட திரண்டு வந்தார்கள். அவர்கள் 'சிவனே' என்று சிவப்பணியில் ஈடுபட்டிருந்த தண்டி நாயனாரைச் சூழ்ந்துகொண்டவர்களாய், 'மண்ணைத் தோண்டி ஏன் மண்ணுக்குள் வாழும் பிராணிகளை வருத்துகின்றாய்'' என்று கேட்டார்கள்.

சமணர்கள் ஆருயிர்கள் மேல் அன்பும் அருளும் காட்டுவதாக நடிப்பார்களே அன்றி, உண்மை யில் இரக்கமனம் படைத்தவர்கள் அல்லர். திரு ஞானசம்பந்தரின் திருமடத்திற்குத் தீ வைத்த அரக்க மனத்துச் சமணர்கள்தான் இப்பொழுது தண்டி நாய னாரயும் சூழ்ந்தவர்களாய், பிராணிகளுக்காக வருந்து வதைப் போல் நடித்து, அவர்தம் திருப்பணிக்கு இடை யூறு செய்தார்கள். முதலையின் கண்ணீர் போன்றதே முன் நிற்கும் சமணர்களின் அன்பும் அருளும் என் பதைத் தெளிவாகத் தெரிந்துகொண்டிருந்த தண்டி நாயனாரும் சமணர்களுக்கு அஞ்சிடாமல் 'சிவபெரு மானுக்குச் செய்யும் எப்பணியும் குறையில்லாத அறமே ஆகும் என்பது ஏன் உங்களுக்குத் தெரிய வில்லை?'' என்று கேட்டுவிட்டுத் திருக்குளத்தின் தூர்வாரும் திருப்பணியை நிறுத்தாமல் தொடர்ந்து செய்துகொண்டிருந்தார்.

சமணர்கள் பேசிய இரக்கம், பொய்யிரக்கமே ஆனதை அவர்களின் அடுத்த செயல் மெய்ப்பித்துக் காட்டியது. மண்ணில் வாழும் புழு முதலியபிராணி களுக்குப் பரிதாபப்படுவதைப் போல் நடித்த அவர்கள், உண்மையில் அன்பும் இரக்கமும் உள்ளவர்களாக இருந்தால் தண்டி நாயனாரிடத்திலும் அல்லவா அன்பு பாராட்டியிருக்கவேண்டும். அவர்கள் தண்டிநாயனார் பணியைச் செய்யாமல் தடுத்தவர்களாய் மேலும் அவரை நெருங்கி 'சொல்வதைக் கேட்க மாட்டாய்! உனக்குக் கண்கள்தான் இல்லை என்று எண்ணினோம். காதும் அல்லவா கேட்கவில்லை'' என்று வசை பாடினார்கள்.

சூழ்ந்துநிற்கும் சமணர்களின் சுடுசொல்லை ஆற்றாத தண்டிநாயனார், அப்பொழுதும் அஞ்சிடா மல் சமணர்களுக்குப் பதில்கொடுத்தார். 'மந்தஉணர்வு, விழிக்குருடு, கேளாச்செவி எல்லாமும் உங்களுக்குத் தான். எனக்கொன்றும் இல்லை' என்று தண்டிநாயனார் துணிவாகப்பேசி 'வில்லால் எயில் மூன்று எரித்த சிவபெருமானின் விரையார் கமலச் சேவடிகளை எப்பொழுதும் மனக்கண்ணால் கண்டுகொண்டிருக்கும் தொண்டன் என்னையா நீங்கள் குருடன் என்று பழிக் கிறீர்கள்? என் தியாகேசன் என்கண்களைக் காணவைப் பான். அதே நேரம் உங்கள் கண்களை எல்லாம் குருடாக்கிவிடுவான். அப்படி நடந்துவிட்டால் நீங்கள் என்ன செய்யப்போகிறீர்கள்?'' என்று சமணர்களிடம் கேட்டார் சிவபெருமானின் திருவருள் திறத்தில் மிகஉறுதியான நம்பிக்கை கொண்டிருந்த தண்டி நாயனார்.

தண்டிநாயனாரின் இவ்வார்த்தையைக் கேட்ட சமணர்கள் ''உன் தெய்வத்தின் அருளால் நீ கண்பெற்றால் நாங்கள் இந்தஊரில் இல்லாமல் எங்காவது ஓடிப்போகிறோம்' என்று தாங்களும் விடையிறுத்தார்கள். அவ்வளவோடு அமையாத அந்த அருகர்கள், தண்டிநாயனார் கையில் வைத்திருந்த மண்வெட்டியையும் கூடையையும் வாங்கித் தூர எறிந்து, அவர் நட்டு வைத்திருந்த கோல்களையும் கயிற்றினையும் கூட சிதைத்து தூர வீசி எறிந்து விட்டனர். 'தருகைக் கயிறும் தறியும் உடன் பறித்தார் தங்கள் தலைபறித்தார்' என்று சேக்கிழார் பெருமான் மொட்டைத் தலையர்களாகிய சமணர்கள் தண்டி நாயனாரிடம் நடந்து கொண்ட முறைகேட்டினைக் குறிப்பிடுகிறார்.

இவ்வாறு சமணர்களால் தாக்கப்பட்டும் தெய்வத் திருப்பணி செய்ய இயலாமல் தடுக்கப் பட்டும் வாடிய தண்டிநாயனார், திருவாரூர் தியாகேசன் ஆலயம் சென்று, அவர் திருமுன்நின்று தமக்குச் சமணர்கள் இழைத்த அவமானத்தைக் கூறி முறை யிட்டு அழுது குறையிரந்தார். ''அழுதால் அவனைப் பெறலாமே'' என்பது மணிவாசகர் திருவாக்கு. தண்டியடிகள் பகலில் அழுதுவருந்தியதற்குச் சிவ பெருமான் இரவில் கனவில் தோன்றி ஆறுதல் கூறினார்.

''நெஞ்சில் மருவும் கவலையினை
ஒழிநீ நின்கண்விழித்தந்த
வஞ்ச அமணர் தமகண்கள் மறையுமாறு
காண்கின்றாய் அஞ்சவேண்டா''

என்று கூறித் தண்டிநாயனாரை மகிழ்வித்த இறைவர், அதே இரவில் திருவாரூரை ஆண்டிருந்த மன்னன் கனவிலும் தோன்றி அவனுக்குக் கட்டளையிட்டார்.

''தண்டி நமக்கு குளங்கல்லக் கண்ட
அமணர் தரியாராய்
மிண்டு செய்து பணிவிலக்க வெகுண்டான்
அவன்பால் நீமேவிக்
கொண்ட குறிப்பால் அவன் கருத்தை
முடிப்பாய்''

இது தியாகேசர் மன்னனிடம் கூறிய செய்தி யாகும். ''தண்டியடிகளைப் போய் பார். சமணர்கள் செய்த அநியாயத்தையும், அது தொடர்பாக எழுந்த வாதத்தையும் கேள். நீயே பக்கம் இருந்து தண்டியின் கருத்தை முடித்து வை'' என்று இறைவனே கட்டளை இட்டபிறகு, மன்னன் வாளா இருக்கமுடியுமா?

அமைச்சர் கட்டளையிட்டால் அவர்தம் கட்டளையை நிறைவேற்ற, அதிகாரிகள் உடன் தலத்திற்கு விரைந்து வருவதை இன்றைக்குக் காண்கிறோம். அப்படித்தான் தியாகேசர் கட்டளையிட, மன்னன் தண்டிநாயனாரைத் தேடிவந்து, அவர்தம் குறையைக் கேட்டான். அவரும் நடந்ததெல்லாம் மன்னனிடம் கூறினார். மன்னன் உடன் சமணர்களையும் வர வழைத்து விசாரித்தான். ''இவருக்கு இவருடைய தெய்வத்தால் கண் கிடைத்தால், நாங்கள் இந்த ஊரை விட்டு ஓட, இப்பொழுது சம்மதிக்கிறோம்'' என்று கூறினார்கள் சமணர்கள் திமிராக, ''தெய்வ மாவது? தெய்வத்தின் அருளால் கண்கள் வருவதாவது? இந்தத் தண்டி ஒரு பைத்தியக்காரன். சிவ பெருமான் தனக்குக் கண்கொடுத்துவிடுவார் என்று ஏதோ குருட்டு நம்பிக்கையில் உளறுகிறான். அவனே குருடன், அவனுடைய நம்பிக்கையும் குருட்டு நம்பிக்கையாகத்தானே இருக்கமுடியும்?'' என்று சிந்தித்தவர்களாய், தெய்வத்தின் பெயரில் உறுதியான நம்பிக்கை இல்லாத சமணர்கள் 'எங்கே தண்டி? கண் வரக் காட்டு பார்ப்போம்'' என்றே துணிவாகக் கூறினார்கள்.

நம்பினோர் கெடுவதில்லை. இது நான்கு மறைத்தீர்ப்பு. தியாகேசரை உறுதியாக நம்பிய தண்டியடிகள் நமசிவாய மந்திரத்தைச் சிந்தித்தவராய், திருக்குளத்தில் மூழ்கினார்.

''ஏய்ந்த அடிமை சிவனுக்குயான் என்னில்
இன்றென் கண்பெற்று
வேந்தன் எதிரே திருவாரூர் விரவும்
சமணர் கண்ணிழப்பார்
ஆய்ந்த பொருளும் சிவபதமே
ஆவதென்றே அஞ்செழுத்தை
வாய்ந்த தொண்டர் எடுத்தோதி மணிநீர்
வாவி மூழ்கினார்''

***- தண்டியடிகள் நாயனார் புராணம் 19.***

கண்ணின் மணிகள் அவையின்றிக், கயிறு தடவிக் குளந்தொட்ட, எண்ணில் பெருமைத் திருத் தொண்டராகிய தண்டிநாயனார் உடன் கண்களை பெற்று திருக்குளத்திலிருந்து எழுந்த அதேநேரம் கண்களைஇழந்து சமணர்கள் ''ஐயோ கண் தெரிய வில்லையே'' என்பதாகக் கூறிக் கதறினார்கள். ஒருவர் மற்றவர்மேல் மோதிக்கொண்டு தடுமாறித் தவித் தார்கள். அவர்கள் கொண்ட துயர்நிலையை சேக்கிழார் பெருமானும்

''குழியில் விழுவார் நிலை தளர்வார்
''கோலுமில்லை'' என உரைப்பார்
விழியிதென்று தூறடைவார்
''மாண்டோம்'' என்பார் ''மதிகெட்டீர்
அழியும் பொருளை வட்டித்திங் கழித்தோம்''
என்பார் ''அரசனுக்கும்
பழியீதாமே?'' என்றுரைப்பார் பாய்கள்
இழப்பார், பறிதலையர்''
''பீலிதடவிக் காணாது பெயர்வார்,
நின்று பேதுறுவார்
காலினோடு கைமுறியக் கல்மேல்
இடறிவீழ்வார்கள்
சால நெருங்கி எதிரெதிரே தம்மிற்தாமே
முட்டிடுவார்
மாலு மனமும் அழிந்தோடி வழிகள்
அறியார் மயங்குவார்''

***- தண்டியடிகள் நாயனார் புராணம் 22-23.***

என இரண்டு பாடல்களில் வருணித்திருக்கிறார். கண்கள் இருந்தபோது அவர்கள் போட்ட ஆட்டத் திற்கு இல்லாதபோது வாடும் இந்த வாட்டம் நியாயம் தானே.

திருவாரூர் மன்னனும், 'தண்டி கருத்தை முடிப் பாய்' என இறைவர் இட்ட கட்டளைக்கிணங்கவே சமணர்களைத் திருவாரூரை விட்டு விரட்டியடித்தான். சமணர்கள் திருக்குளத்தைத் தூர்த்து அமைத்த பள்ளி களும் பாழிகளும் மறைந்தன. முன்பு கண்கள் இல் லாமல் தூர்வாரும்பணியில் தனியொருவராக ஈடு பட்ட தண்டிநாயனார், பிறகு இருகண்களுடன் மன்னவன் துணையோடு கமலாலயத்திருக்குளத் திருப்பணியைச் செவ்வனே செய்து முடித்து, சிவ பெருமானின் திருவடிநிழலை அடைந்தார்.

## வேலைக் காரன் யார்? காவற்காரன் யார்?

முருகனே வேலைத் தம் திருக்கரத்தில் தாங்கியுள்ள வேலைக்காரன் ஆவான். அவன் வேல் கடலைத் துளைத்து சூரபதுமன் மார்பைத் துளைத்து அடியவர்களைக் காத்தது. ஒப்பில்லாத வேலை தாங்கியுள்ள வேலைக்காரன் ஆன முருகன். முனிவர்களைக் காத்துநிற்கும் காவற்காரனும் ஆவான்.

அருணகிரிநாதர் தாம் அருளியுள்ள ''திருவேளைக்காரன் வகுப்பு'' எனும் கோள்களின் கொடுமையைப் போக்கும் மந்திரப் பாடலில் முருகனைப் பிறவிக்கடல் ஏறவிடும் நற்கருணை ஓடக்காரன் எனவும், மேதகு குறத்தியுடன் எந்த நேரமும் வீற்றிருந்து அருள்புரியும் வேளைக்காரன் எனவும் பாடியுள்ள கருத்தின் நயமும், சொல் நயமும் எண்ணி எண்ணி மகிழ்தற்குரிய ஒன்றாகும்.

''யாதுநிலை யற்றலையும் ஏழுபிறவிக்கடலை
ஏறவிடு நற்கருணை ஓடக்காரனும்....
யாக முனிவர்க்குரிய காவற்காரனும்....
வேலை துகள் பட்டு மலை சூரன் உடல் பட்டுருவ
வேலையுற விட்டதனி வேலைக்காரனும்....
மேவிய புனத்திதனில் ஓவியமெனத் திகழும்
மேதகு குறத்திதிரு வேளைக்காரனே''

எந்த வேளையும் கந்த வேளை நினைமனமே.

''மன்னர் வணங்கிப் போயினபின்
மாலும் அயனும் அறியாத
பொன்னங் கழல்கள் போற்றிசைந்துப் புரிந்த
பணியும் குறை முடித்தே
உன்னு மனத்தால் அஞ்செழுத்தும்
ஓதி வழுவாதொழுகியே
மின்னும் சடையார் அடிநீழல் மிக்க
சிறப்பின் மேவினார்.

- *தண்டியடிகள் நாயனார்புராணம் 25.*

தண்டியடிகள் நாயானாரின் வரலாற்றால் திருக்குளத்திருப்பணித்தொண்டின் மகத்துவத்தை அறிகிறோம். ஒவ்வொரு ஆலயமும் மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் மூன்றாலும் சிறப்புப்பெறுகிறது. புண்ணியத் தீர்த்தங்கள் உள்ள திருக்குளங்களைத் தூய்மையுடன் பேணவேண்டுவது மக்களின் தலைசிறந்த கடமை யாகும். இன்றைக்கு நம்முடைய அறநிலையத்துறை யின் மூலம் ஆலயத் திருக்குளத் திருப்பணிகள் பல வேகப்படுத்தப்பட்டு நிறைவேற்றப்பட்டு வருகின்றன. எனினும் திருக்குளத் தூய்மையைப் பராமரிப்பதில் மக்களின் பங்கே மிகப் பெரியதாகும். கண்ணற்ற நிலையிலும் தண்டிஅடிகள் திருக்குளத்தின் தூய்மையைப் பராமரிக்கக் காட்டிய ஆர்வத்தில் நூறில் ஒரு பங்காவது நாம் இன்றைக்குக் காட்டுகிறோமா? நாம் பிறரைத் தூற்றவும் குறைகூறவும் எடுத்துக்கொள்ளும் முயற்சிகளை இனி கைவிட்டுத் திருக்குளத்தின் தூய்மையைக் காத்திடவும் அதற்கான நம் கடமையைத் தொண்டுள்ளத்துடன் ஆற்றவும் முன்வருவோமாக!

★★★

# நவராத்திரியின் சிறப்பு

சக்தியின் மைந்தன்

## முன்னுரை

சக்தி வழிபாடு, மிகத் தொன்னெடுங்காலம் முதலே நம் இந்திய நாட்டில் இனிது நிகழ்ந்து வருகின்றது. மொகஞ்சோதாரோ என்னும் இடத்தில் நிகழ்த்தப்பெற்ற அகழ்வாராய்ச்சிகளிற் கிடைத்த பல பொருள்களில், அம்பிகை ஆகிய உலக அன்னையின் மண்சிலைகள் பலவும்கூட உள்ளன. ஆராய்ச்சியாளர்களின் கருத்தின்படி, சிந்து வெளி நாகரிக காலம் ஏறத்தாழக் கி.மு. 4000 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்று புலனாதலின், சக்தி வழிபாடு அதற்கும் முன்னரே நிலவி வந்த பழமையுடையது என்பது தெளிவாம்.

சிந்து வெளிப் பகுதியிற் கிடைத்த அம்பிகையின் சிலைகளைப் போலவே, பாரசிகம், ஏஜியன், ஏலம், மெசபட்டோமியா, டிரான்ஸ்காஸ்பியா, துருக்கி, சிரியா, பாலஸ்தீனம், சைப்ரஸ், கிரீட், பால்கன், எகிப்து முதலிய பல்வேறு நாடுகளிற் கிடைத்த சிலைகளும் இருப்ப தனால், அம்பிகை வழிபாடு மிகப் பழங்காலத்தி லேயே பல நாடுகளிலும் தொன்று தொட்டே பரவி யிருத்தல் வேண்டும் என்று, சர் ஜான் மார்ஷல் என்னும் பேரறிஞர் ஆராய்ந்து கூறுகின்றார்.

## சக்தி வழிபாடு

சிலர் கடவுட் பெரும் பொருளை 'அது' என்று சுட்டுகின்றனர். மற்றும் சிலர் 'அவன்' எனக் குறிப்பிடுகின்றனர். 'அது' என்று சுட்டினால் கடவுள் அஃறிணைப் பொருள் என முடியும். 'அவன்' என்றாலோ, கடவுள் ஆணாக மட்டுமே இருப்பதாகக் கொள்ளப் படும். கடவுள் எல்லாமாயும் அல்லவாயும் நிற்கும் இயல்புடையவர் ஆதலின், அவரை நாம் ''அவன் அவள் அது'' என மூன்று நிலைகளிலும் குறிப்பிடுதல் பொருந்தும். இறை நிலையை 'அவள்' எனத் தக்கவாறு கொண்டு வழிபடும் முறையே சக்தி வழிபாடு ஆகும்.

## சமுதாய வாழ்வு

கடவுட் பெரும் பொருளைப் பெண்ணாக, பெண் வடிவத்தில் வைத்துப் போற்றுதலையே, நாம் சக்தி வழிபாடு என்கின்றோம். சமுதாய வாழ்விலும், குடும்ப வாழ்விலும் பண்டைக் காலம் முதலே இந்தியப் பெண்மணிகள் சிறப்பிடம் பெற்றிருந்தனர். தாயாகவும், மகளாகவும், சகோதரியாகவும், மனைவியாகவும், உலகியல் வாழ்விற் பெண்கள் பல்வேறு நிலைகளிற் சிறப்புற்றுத் திகழ்ந்து வருகின்றனர். ஒரு பெண்ணின்சிறப்பும் கடமையும் பொறுப்பும், குடும்ப வாழ்விற் படிப்படியே வளர்ந்தோங்குகின்றன.

பெண்மை நலங்கள் அனைத்தும் தாய்மை நிலையிலேயே சிறந்தோங்கி ஒளிவீசித் திகழ்கின்றன. அன்பும் அருளும் பரிவும் இரக்கமும் தூய்மையும் மென்மையும் தியாகமும் ஆகிய சிறந்த தெய்விகப் பண்புகள் அனைத்தும் தாயிடமே ஒருங்கே அமைந்து நிலவுகின்றன. தாய்மையின் சிறப்பனைத்தும் தகவுணர்ந்தே, நம் முன்னைச் சான்றோர்கள் கடவுளைத் தாயாக வழிபட்டு வரலாயினர். பெண்ணினத்தின் எண்ணரிய பெருஞ் சிறப்புக்களையெல்லாம் இனிது உணர்ந்து போற்றிய சமுதாய வாழ்வின் விளைவே, சக்தி வழிபாடு எனலாம்.

## தாயின் பிரிவு

சக்தியை உலகுயிர்களுக்குத் தாயாகச் சமய நூல்கள் போற்றுகின்றன. தாய் தன் குழந்தைகள் செய்யும் தவறுகளையெல்லாம் மன்னித்து, அன்பு செலுத்திப் பரிவு காட்டி நலஞ் செய்கின்றாள். அவ்வாறே சக்தியாகிய தேவியும் உலகுயிர்கள் இயற்றும் பிழைகளையெல்லாம் பொறுத்து அருள் புரிகின்றாள்.

தந்தை தன் பிள்ளைகள்பாற் சினங்கொள்ள நேர்ந்தவழி, தாய் பிள்ளைகளின் சார்பிற் பரிந்துரையாடித் தந்தையின் சினத்தைப் போக்கி நன்மை புரிகின்றாள்.

ஆய்முத்துப் பந்தரின் மெல்லணை
மீதுன் அருகிருந்து,
நீமுத்தம் தாஎன் றவர் கொஞ்சும்
வேளையில், நித்தநித்தம்
வேய்முத்த ரோடென் குறைகள்
எல்லாம் மெல்லமெல்லச் சொன்னால்,
வாய்முத்தம் சிந்தி விடுமோ?
நெல்வேலி வடிவம்மையே!

எனக் கவிஞர் ஒருவர் கவினுறப் பாடுவது போல, இறைவனாகிய தந்தை உலகுயிர்கள் ஆகிய மக்கள் செய்யும் தீவினைகளுக்காகச் சினங்கொண்டு ஒறுத்தொழிக்காத படி, தாயாகிய அம்பிகையே தன் பெருங் கருணையாற் பரிந்துரை கூறித் தடுத்துக் காப்பாற்றியருள்கின்றாள்.

### தென்னகத்தின் பண்பாடு

உலகுயிர்களின் உய்தி கருதி, இறைவனின் திருவருள் செயற்படும் இவ்வியல்பினைத் தாயின் தண்ணளியோடு ஒப்பிட்டு, ஆழ்வார்களும் நாயன்மார் களும் தமது செந்தமிழ்த் தெய்விகப் பாடல்களிற் சிறப்புறப் பாடிப் புகழ்ந்து போற்றியுள்ளனர்.

சிவபிரானுக்கு உமையம்மையையும், திரு மாலுக்குத் திருமகளையும், சக்தியாக வைத்துத் தாய்மைத் தெய்வத்தைப் போற்றும் வழிபாட்டு முறை, முதன் முதலில் தென்னிந்தியாவிலேயே தோன்றிய தென்றும், இது தென்னகத்தின் சிறப்பியற் பண்பாடு என்றும், ஆராய்ச்சிப் பேரறிஞர் திரு. சுநீதி குமார சாட்டர்ஜி அவர்கள் குறிப்பிடுதல், ஈண்டு நாம் உணர்ந்து இன்புறுதற்குரியது.

### இளங்கோவடிகள்

தமிழ் நாட்டில் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சக்தி அல்லது தேவி வழிபாடு சிறப்புற நிகழ்ந்து வந்தது. பாலைத் திணைக்குரிய தெய்வமாகத் துர்க்கை (கொற்றவை) போற்றப்பெற்றாள். சிலப் பதிகாரத்தில் ''வேட்டுவவரி'' என்னும் பகுதியில், இளங்கோவடிகள் சக்தி வழிபாட்டின் இயல்பையும், அதன் சிறப்பையும் அழகுறப் பாடியருளியுள்ளார். சக்தி வழிபாடு சிவ வழிபாட்டோடு தொடர்புடைய தாகலின், சிவ பெருமானுக்கு உரிய நெற்றிக் கண் நீல கண்டம் - மேரு மலையாகிய வில்லை வளைத்தல் - சூலம் ஏந்துதல் - யானையின் தோல் போர்த்தல் முதலிய பண்புகளை அம்பிகைக்கும் உரியனவாக வைத்து,

'நுதல்கிழித்து விழித்த இமையா நாட்டம்'
'நஞ்சுண்டு கறுத்த கண்டி'
'அரவுநாண் பூட்டி நெடுமலை வளைத்தோள்'
'வளையுடைக் கையிற் சூலம் ஏந்தி'
'கரியின் உரிவை போர்த்த அணங்கு'

என்றெல்லாம் இளங்கோவடிகள் சக்தியைக் குறித்துப் பாடுகின்றார். மேலும் 'அமரி - குமரி - கவுரி - சமரி - சூலி - நீலி - மாலவற்கு இளங்கிளை (தங்கை) ஐயை - செய்யவள் - வெய்யாள் - தடக்கைப் பாய்கலப் பாவை - பைங் கொடிப்பாவை - ஆய்கலைப் பாவை - அருங் கலைப் பாவை - தமர்தொழ வந்த குமரி' என்றும், பலவகைகளில் தேவியின் சறப்பைச் சிலப்பதிகாரம் போற்றுகின்றது.

### சிலப்பதிகாரம்

செந்தமிழ்ப் பெருங் காப்பியம் ஆகிய சிலப் பதிகாரம் என்னும் சிறந்த பெருநூலில், சக்தி வழிபாடு பற்றிய பலதிறக்குறிப்புக்கள் அமைந்திருக்கக் காண் கின்றோம். கூடல் மாநகரிற் கோவலன் கொலையுண்டு மடிகின்றான். கணவன் கொலையுண்ட செய்தி அறிந்த கண்ணகி பெரிதும் வருந்துகின்றாள். பாண்டிய வேந்தனைக் கண்டு, தன் கணவன் 'கள்வன் அல்லன்' என்று மறுத்துரைத்துத் தெளிவுறுத்த விரும்புகின்றாள். பாண்டியனின் அரண்மனை நோக்கிச் செல்கின்றாள். அங்கிருந்த வாயில் காவலனை விளித்து, அரசனுக்குத் தன் வருகைபற்றி அறிவிக்குமாறு பணிக்கின்றாள். அவள் அவளது தோற்றமும் சீற்றமும் கண்டு அஞ்சி நடுங்கி ஓடோடிச் சென்று, அரசனுக்குக் கண்ணகியின் வருகைபற்றித் தெரிவிக்கின்றான். அப்பகுதியில்,

''அடர்த்தெழு குருதி அடங்காப் பசுந்துணிப்
பிடர்த்தலைப் பீடம் ஏறிய மடக்கொடி
வெற்றிவேற் றடக்கைக் கொற்றவை யல்லள்!
அறுவர்க்கு இளைய நங்கை! இறைவனை
ஆடல்கண் டருளிய அணங்கு! சூருடைக்
கானகம் உகந்த காளி! தாருகன்
பேருரம் கிழித்த பெண்ணும் அல்லள்!
செற்றனள் போலும் செயிர்த்தனள் போலும்!''

எனவரும் வரிகளால், சக்தியின் வெவ்வேறு திறக் கூறுகள் ஆகிய கொற்றவை, பிடாரி, பத்திரகாளி, காளி, துர்க்கை என்பன சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப் பெற் றிருத்தல் காணலாம்.

### நவராத்திரி

நவராத்திரி என்பது, சக்தி வழிபாடு குறித்துச் சிறப்புறக் கொண்டாடப்பெறும் விழாவாகும். ஒவ் வோர் ஆண்டும் புரட்டாசி மாதத்தில், வளர்பிறைப் பிரதமை முதல் நவமி வரை, ஒன்பது நாட்கள் கொண்டாடப் படுதலினால், இது நவராத்திரி என வழங்கப்பெறும். பத்தாம் நாள் ஆகிய விஜயதசமி யையும் விழா நாளாகச் சேர்த்துக் கணக்கிட்டுத் தசரா என்றும், இவ்விழாவைக் குறிப்பிடுவது உண்டு. உலகத்தைத் துன்புறுத்தி வந்த மகிஷாசுரன் என்னும் கொடிய அரக்கனை எதிர்த்து ஒன்பது நாட்கள் போரிட்டு, தசமி ஆகிய பத்தாம் நாளில், அம்பிகை அவனை அழித்து வெற்றி கொண்டனள் ஆதலின், அந்நாளை விஜயதசமி எனச் சிறப்பித்து வழங்குவர். மகிஷாசுரனை வென்று கொன்ற அம்பிகையினைத் துர்க்கை என்றும், கொற்றவை என்றும் நூல்கள் புகழ்ந்து கூறும்.

சிலப்பதிகாரத்தில் 'வேட்டுவ வரி' என்னும் பகுதியில், மகிஷாசுரன் என்னும் எருமைத் தலை அரக்கனை அழித்து, வெற்றி கொண்ட கொற்றவை

ஆகிய துர்க்கையினைப் பற்றிய பல குறிப்புக்களும் பாடல்களும் காணப்படுகின்றன.

## மகிஷாசுர மர்த்தனி

துர்க்கை என்னும் கொற்றவையானவள், தனது கணவராகிய சிவ பெருமானைப்போல, ஆனைத் தோலைப் போர்த்திக் கொண்டும், புலியின் தோலை உடையாக அணிந்து கொண்டும், மகிஷாசுரன் ஆகிய எருமை அரக்கனின் தலையினை மிதித்துக் கொண்டு, தேவர்கள் எல்லாரும் வணங்கும்படி, மறை நூல்களுக்கெல்லாமும் மறை பொருளாகி, ஞானக் கொழுந்தாகக் காட்சி தருகின்றாள்.

**ஆனைத் தோல் போர்த்துப் புலியின் உரியுடுத்துக்**
**கானத்து, எருமைக் கருந்தலைமேல் நின்றாயால்!**
**வானோர் வணங்க மறைமேல் மறையாகி**
**ஞானக் கொழுந்தாய் நடுக்கின்றி யேநிற்பாய்!**

வளையல்களை அணிந்த கையில் வாளை ஏந்திக் கொண்டு, வலிமை மிக்க மகிஷாசுரனை அடக்கி வென்று, கலைமானை ஊர்தியாக ஏற்று, மும்மூர்த்திகளும் தங்கள் இதய கமலத்தில் தியானித்து வணங்கி வழிபடும் அருட்பெருஞ்சோதி விளக்காக, அம்பிகை விளங்குகின்றாள்.

**வரிவளைக்கை வாளேந்தி மாமயிடற் செற்றுக்**
**கரியதிரி கோட்டுக் கலைமிசைமேல் நின்றாயால்!**
**அரியரன்பூ மேலோன் அகிமலர்மேல் மன்னும்**
**விரிகதிரஞ் சோதி விளக்காகியே நிற்பாய்!**

திருமாலுக்குரிய சங்கினையும் சக்கரத்தையும் தாமரை மலர் போன்ற திருக்கைகளிலே ஏந்திக் கொண்டு, சிவந்த கண்களையுடைய சிங்கம் ஆகிய ஊர்தியின்மீது, கங்காதரனும் நெற்றிக் கண்ணனும் ஆகிய சிவபெருமானின் இடப்பாகத்தில், அர்த்த நாரீசுவரியாகத் தேவி அருட்காட்சி வழங்கியருள் கின்றாள்.

**சங்கமும் சக்கரமுந் தாமரைக் கையேந்திச்**
**செங்கண் அரிமான் சினவிடைமேல் நின்றாயால்!**
**கங்கை முடிக்கணிந்த கண்ணுதலோன் பாகத்து**
**மங்கை யுருவாய் மறையேத்த வேநிற்பாய்!**

*- சிலப்பதிகாரம்*

## முடிவுரை:

இவ்வாறு எல்லாம் தேவி வழிபாடு, தமிழகத்தில் மிகப் பழங்காலம் தொட்டே சிறப்புற நிகழ்ந்து வந்தமை தெளியலாம்.

**தனம்தரும்; கல்வி தரும்; ஒரு**
**நாளும் தளர்வறியா**
**மனம்தரும்; தெய்வ வடிவும்**
**தரும்; நெஞ்சில் வஞ்சமில்லா**
**இனம்தரும்; நல்லன எல்லாம்**
**தரும்; அன்பர் என்பவர்க்கே**
**கனம்தரும்; பூங்குழாள்**
**அபிராமி கடைக்கண்களே.**

என அபிராமி பட்டர், தமது அபிராமி அந்தாதி என்னும் நூலில் பாடியருளியவாறு போல, உலக அன்னையாகிய பராசக்தியைப் பரவி எல்லா நலங்களையும் பெற்று உய்யலாம் என்பது திண்ணம். நவராத்திரி விழா நிகழும் நாட்களில், நாமனைவரும் அம்பிகையைப் போற்றி, அவள் அருளைப் பெற்று நலமுற வாழ முயலுவோமாக!

★★★

## *திருநீறு அணியும்போது முப்பட்டைகளாக இடுவதேன்?*

*1) புருவத்தை ஒட்டியுள்ள முதல் பட்டை உடல்சுத்தம் குறிக்கும்.*

*2) நடுப்பட்டை வாக்கு சுத்தம் குறிக்கும்.*

*3) மேல்பட்டை மனச் சுத்தம் குறிக்கும்.*

# அருள்மிகு பண்ணாரி மாரியம்மன்

பட்டாபி சுப்பிரமணியம், துணை ஆணையர் - நிர்வாக அதிகாரி, அருள்மிகு பண்ணாரி மாரியம்மன் திருக்கோயில், பண்ணாரி - 638 401, சத்தியமங்கலம் வட்டம், பெரியார் மாவட்டம்.

அம்மா தாயே பண்ணாரி!
அன்னை நீயே ஓங்காரி!
சும்மா இருந்தால் பயனிலையே - உனைச்
சுற்றி வந்தால் வினையிலையே!

அனைத்துச் சக்திகளுக்கும் ஆதாரமாக இருப்பது பராசக்தியாகும். அப்பராசக்தியே பல்வேறு பெயர்களுடன் பல்வேறு தலங்களிலும் குடிகொண்டுள்ளாள். அச்சக்தியே கொங்கு நாட்டின் வடமேற்கு எல்லையருகில் மைசூர் செல்லும் பிரதான வழியில் வீற்றிருக்கும் அருள்மிகு பண்ணாரி மாரியம்மன். மிகவும் சக்தி வாய்ந்த காவல் தெய்வமாவார்.

இத்தலம் ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலத்திலிருந்து மேற்கே 14 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. இத்தலம் அடர்ந்த வனத்திடையே அமைந்துள்ளது. தெற்கு, வடக்கு, மேற்கு ஆகிய மூன்று பக்கங்களிலும் இத்தலம் வனத்தால் சூழப்பட்டுள்ளது. அடர்ந்த காட்டுப்பகுதியில் யானைகளும் காட்டுப்பன்றிகளும், மான்களும், நரிகளும், வண்ண மயில்களும், குரங்குகளும், முயல்களும், கரடிகளும் மற்றும் மிகக் கொடிய விஷஜந்துகளும் சர்வ சாதாரணமாக உலாவும், இத்தலத்தில் தெற்குப் பார்த்த வண்ணமாக எழுந்தருளியுள்ள அருள்மிகு பண்ணாரி மாரியம்மன் சுயம்புலிங்க வடிவமாக உள்ளாள்.

இன்றைக்கு சுமார் 300 ஆண்டுகளுக்கு முன்பு இவ்விடம் அடர்ந்த வனப்பகுதியாக இருந்தது. இவ்விடத்தில் வற்றாத காட்டாறு ஓடிக்கொண்டே இருக்கும். காட்டாற்றின் பெயரோ தோரணப்பள்ளம் என்பதாகும். இக்காட்டாறு இத்தலத்தின் மேற்கு புறத்தில் உள்ளது. திம்பம் மலையின் அடிவாரம், தென்குமரி தெய்வத்தின் அவதாரம் இவ்விடத்தில் நிகழப்போகிறது என்பதை உலகினுக்கு அறிவிக்கவோ என்னவோ இக்காட்டாற்றின் துறையில் பசுவும், புலியும் ஒரே இடத்தில் நீர் குடிக்கும் நிகழ்வுகள் நிகழ்ந்துள்ளன.

## அன்னையவள் அருள்சுரக்க!

இச்சுற்று வட்டார கிராமமக்கள் தங்கள் ஆடு, மாடுகளை மேய்ப்பதற்கு இவ்வனப்பகுதிக்குச் செல்வது வழக்கம். இம்மக்கள் மாடுகளுக்குப் பட்டிகள் அமைத்து வனப் பகுதியிலேயே தங்கிக் கொள்வார்கள். தினசரி காலையில் மாடுகளை மேய்ப்பதற்கு ஓட்டிச் செல்வார்கள். பின்னர் மாலையில் மாடுகளை ஓட்டி வந்து பட்டியில் அடைப்பார்கள். காலையிலும் மாலையிலும் பாலைக்கறந்து மாட்டின் உரிமையாளருக்குக் கொடுப்பார்கள்.

ஒரு பட்டியிலிருந்து காராம்பசு ஒன்று கறக்கச் சென்றால் கறப்பதற்கு நில்லாமல் தன் கன்றுக்கும் கொடுக்காமல் இருப்பதை மாடுகளை மேய்ப்போன் அறிந்தான். மறுநாள் மாட்டினைப் பின்தொடர்ந்து சென்று கவனித்தான். அப்பசு தன்தனத்தூறும் பாலை ஒரு வேங்கை மரத்தின் அடியில் கணம் புற்கள் சூழ்ந்த ஒரு குறிப்பிட்ட இடத்தில் தன்னிச்சையாக பொழிவதை மறைவிலிருந்து பார்த்தான்.

இந்நிகழ்ச்சியைக் கண்ணுற்ற அவன் மறுநாள் சுற்றுவட்டார கிராம மக்களிடமும் ஊர் பெரியவர்களிடமும் விபரத்தைச் சொல்லி மாட்டினைப் பின் தொடர்ந்து சென்று ஒரு குறிப்பிட்ட இடத்தில் (மாடு) காராம்பசு பால் சொரிவதைக் காண்பித்தான். அனைவரும் இவ்வரிய நிகழ்ச்சியினை கண்ணுற்று மெய் சிலிர்த்து நின்றார்கள். இதுதெய்வத்தின் திருவிளையாடல் என்றெண்ணிக் கைகூப்பித் தொழுதார்கள்.

மக்கள் அனைவரும் அவ்விடத்தைச் சுத்தம் செய்யுங்கால் கணம்புற்கள் சூழ்ந்த ஒரு புற்றும் அதனருகில் சுயம்புலிங்கத் திருவுருவும் வேங்கை மரத்தின் அடியில் இருப்பதைக் கண்டார்கள் அப்போது அக்கூட்டத்தில் இருந்த ஒருவர் மேல் தெய்வம் உண்டாகி நான் கேரளா மாநிலம் வண்ணார்காடு (மண்ணார்காடு) என்ற ஊரிலிருந்து பொதிமாடுகளை ஓட்டிக்கொண்டு மைசூர் செல்லும் மக்களுக்கு வழித்துணையாக வந்தேன் என்றும் எழில் மிகுந்த இவ்வியற்கைச் சூழலில் தான் தங்கிவிடுவதாகவும், தன்னை இனிமேல் பண்ணாரி மாரியம்மன் எனப்போற்றி வழிபட்டு வாருங்கள் எனவும் அருள்வாக்கில் கூறினார்.

அன்னையின் அருள்வாக்கின்படி அவ்விடத்தில் கணம்புற்கள் கொண்டு ஒரு குடில்

அமைத்து கிராமிய முறைப்படி நாள்தோறும் பண்ணாரி அன்னையை வழிபட்டு வந்தனர். பின்பு ஊர் மக்களும் பெரியதனக்காரர்களும் அன்னையின் சிறப்புக் கருதி அன்னைக்கு விமானத்துடன் கூடிய சிறு கோவில் அமைத்து பத்மபீடத்துடன் திருவுருவம் அமைத்து வழிபட்டு வருகின்றனர்.

## திருவிழா

ஒவ்வோர் ஆண்டும் பங்குனி மாதம் உத்திரத்தை அடுத்து சமீபத்தில் வரும் திங்கட் கிழமை இரவு (செவ்வாய்க்கிழமை அதிகாலை) குண்டம் திருவிழா நடைபெறும். அப்பொழுது பல லட்சம் மக்கள் இங்கு கூடுவார்கள். அன்று அம்பிகைக்கு விசேஷ அலங்காரமும், பூசையும் நடைபெறும். அன்று இரவு (செவ்வாய்க்கிழமை காலை 4.00 மணியளவில்) பக்தர்கள் விரதமிருந்து மஞ்சள் ஆடை உடுத்தியும், கையில் வேப்பிலையுடன் அக்கினிக்குண்டம் இறங்குவர். பக்தர்கள் குண்டம் இறங்கியபின் கால்நடைகளும் குண்டத்தில் இறங்கும். இந்நிகழ்ச்சியே இத்திருக்கோயிலின் சிறப்பு அம்சமாகும். இவ்விழாவிற்காக விசேஷ பேருந்து வசதிகளும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கும்.

## மறுபூசை விழா

குண்டம் திருவிழா முடிந்த 7ஆம் நாள் திங்கட் கிழமை மறுபூசை திருவிழா நடைபெறும். அன்று அம்பிகைக்கு விசேஷ பூசையும் மிரவணை எடுத்தலும் நடைபெறும். அவ்வமயம் பக்தர்கள் கையில் திரிசூலம் ஏந்தி மேளதாளத்துடன் திருக்கோவிலை சுற்றி வருவர். அன்றும் லட்சணக்கணக்கான பக்தர்கள் கூடுவர்.

## அம்பிகையின் மகிமைகள்

அம்பிகையை பயபக்தியுடன் சதா துதிக்கும் அன்பர்களுக்கு வேண்டியதை வேண்டிய வண்ணம் அருள்பாலிக்கின்றாள். இதனால் சதா பக்தகோடிகள் வந்து அபிஷேக ஆராதனைகள் செய்வதும், பொங்கலிட்டும், முடிகளைந்தும் உருள்தண்டம் முதலியன செய்தும் வழிபடுகின்றனர். அமாவாசை, ஞாயிறு, திங்கள், செவ்வாய் மற்றும் வெள்ளி ஆகிய நாட்களில் பக்தர்கள் ஆயிரக்கணக்கில் திரண்டுவந்து அன்னையை வழிபட்டு மகிழ்ச்சியுடன் செல்கின்றனர்.

உதாரணமாக, அம்பிகைக்கு வழக்கம்போல் ஆண்டுதோறும் நடக்கும் திருவிழாவிற்கு அக்கினிக் குண்டம் வளர்த்து அதில் பக்தகோடிகள் இறங்குவார்கள். திருவிழாவில் திருக்குண்டம் அமைக்க வனத்திலிருந்து மரங்களை (கரும்பு) வெட்டிக் கொண்டு வந்து போடுவது எப்பொழுதும் வழக்கம். ஓர் ஆண்டு காட்டு இலாகா ஆங்கில அதிகாரி பயணியர் விடுதியில் தங்கியிருந்தவர் குண்டத்திற்கு வனத்தில் மரங்களை வெட்டக்கூடாது என்று தடுத்துவிட்டார்.

அதனால் குண்டம் ஏற்படுத்த நேரம் அதிகம் ஆனதோடு திருவிழாவிற்கும் தடங்கல் ஏற்பட்டது. உடனே தேவியின் கிருபையால் அந்த அதிகாரிக்கு வாந்தி பேதி கண்டு துன்பமுற்றுக் கோயிலுக்குச் சொல்லி அனுப்பித் தீர்த்தம், விபூதி தருவித்து அணிந்துகொண்டு தேவியை பணியவும் வாந்திபேதி குணமடைந்தது. ஆகவே, அவர் மனம்மாறி உடனே குண்டத்திற்கு கரும்பு (மரம) வெட்டுவதற்கு அனுமதி கொடுத்தார். திருவிழாவும் வழக்கம்போல் நடந்தது என்று கூறப் படுகிறது.

## தினசரி பூசை காலங்கள்

| | | |
|---|---|---|
| காலசந்தி | - | 6-00 மணி |
| உச்சிக்காலம் | - | 12-00 மணி |
| சாயரட்சை | - | 6-00 மணி |
| அர்த்தசாம பூசை | - | 9-00 மணி |

## பக்தர்களுக்குச் செய்யப்பட்டுள்ள வசதிகள்

பக்தர்களின் வசதியை முன்னிட்டு இத்திருக் கோயிலுக்கு அருகில் திருமண மண்டபம் ஒன்று கட்டப்பட்டு சிறந்த முறையில் உபயோகத்தில் உள்ளது. இத்திருக்கோயிலில் பல இடங்களில் தண்ணீர் குழாய்கள் அமைக்கப்பட்டு 24 மணிநேரமும் தங்குதடையின்றி தண்ணீர் கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. மேலும், திருக்கோயில் சார்பில் இலவசச் சிறப்பு மருத்துவமுகாம் நடைபெற்று வருகின்றது. மேலும், ஆதரவற்ற ஏழை மாணவர்களைக் கொண்ட கருணை இல்லம் ஒன்று சிறப்பான முறையில் நடந்துவருகிறது. மற்றும் பக்தர்கள் வசதிக்காக நான்கு சத்திரங்களும், பக்தர்கள் தங்கும் விடுதி அறைகள் 22ம் சொகுசு அறைகள் 4ம் சிறப்பான முறையில் பரா மரிக்கப்பட்டு வருகின்றன.

## கட்டணச் சீட்டுகள் விபரம்

| | | ரூ. பை. |
|---|---|---|
| 1. | அபிடேகம் | 2-00 |
| 2. | தனி அனுமதி | 2-00 |
| 3. | சிறப்பு அனுமதி | 10-00 |



| | | |
|---|---|---|
| 4. | முடி காணிக்கை | 5-00 |
| 5. | மோட்டார் சைக்கிள், ஸ்கூட்டர் பூசை | 5-00 |
| 6. | லாரி, பஸ், கார் பூசை | 15-00 |
| 7. | அம்மனிடம் வரம் கேட்டல் | 2-00 |
| 8. | கணக்கு வகையறாக்களை வைத்து பூசை செய்ய | 25-00 |
| 9. | அர்ச்சனை டிக்கெட் | 1-00 |
| 10. | நாமகரணம் சூட்ட | 2-00 |
| 11. | அமுதூட்டல் கட்டணம் | 2-00 |
| 12. | காதுகுத்த கட்டணம் | 5-00 |
| 13. | அம்மன் திருவுருவப்படம் பெரியது 1க்கு | 4-00 |
| 14. | அம்மன் திருவுருவப்படம் சிறியது 1க்கு | 2-00 |
| 15. | குங்குமம் பாக்கெட் 1க்கு | 1-00 |
| 16. | திருமண மண்டபம் 1நாள் வாடகை | 1,350-00 |
| 17. | ஒவ்வொரு தமிழ் மாதமும் கடைசி வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு 250 திருவிளக்குகள் வைத்து திருவிளக்குகள் பூசை சிறப்பாக நடைபெற்று வருகிறது. கட்டணம் சீட்டு 1க்கு | 10-00 |

ஆணையர் உத்திரவுப்படி கட்டளை முத வீடாக (டெபாசிட்டாக) ரூ. 1,001/= பெற்று அதன் வட்டியைக் கொண்டு குறிப்பிட்ட நாளில் பக்தர் களுக்கு இலவச மதிய உணவு பிரசாதம் வழங்கும் திட்டம் சிறப்பான முறையில் செயல்பட்டு வரு கிறது. மற்றும் கோசாலை ஒன்று இத்திருக்கோயி லின் சார்பில் அமைக்கப்பட்டு கோசம்ரட்ஷணம் செய்யப்படுகிறது. கோசாலையில் உள்ள பசுக்களின் பாலைக் கறந்து அம்பாளுக்கு அபிஷேகம் செய்யப் படுகிறது.

## அரசு அறிவித்துள்ள திட்டங்கள்

1. 101 வசதியற்ற ஏழை மணமக்களுக்கு இத்திருக் கோயில் சார்பில் இலவசத் திருமணம் விரை வில் நடைபெறவுள்ளது.

2. 100 ஆதரவற்ற ஏழை மாணவர்கள், மாணவியர் கள் இத்திருக்கோயில் கருணை இல்லத்தில் தங்கிப் படிக்கவும், ஆதரவற்ற ஏழை முதியோர் இக்கருணை இல்லத்தில் சேர்ந்து பராமரிக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது.

## திருக்குட நீராட்டு விழா

ஆணையர் அனுமதியின்படி தற்போது கரு வறை விரிவுபடுத்தப்பட்டு விமானம் புதுப்பிக்கும் பணியும், மகா மண்டபம் விரிவு படுத்தும் பணியும் உபயதாரர்கள் மூலம் செய்யப்பட்டது. ஏற்கனவே பிரகார மண்டபம் அனைத்து வேலைபாடுகள் செய்து முடிக்கப்பட்டுள்ளது. இத்திருக்கோயில் திருப்பணிகள் நிறைவுபெற்று 3.9.98 அன்று திருக்குட நீராட்டுவிழா மிகச்சிறப்பாக நடைபெற்றது. 50000 பக்தர்கள் இவ்விழாவில் பங்குபெற்று பண்ணாரி அம்மன் அருள்பெற்றார்கள்.

# சைவமும் பெரிய புராணமும்

முனைவர் இரா. செல்வகணபதி

*(முன் தொடர்ச்சி)*

மூவர் முதலிகள் வாழ்வில் இறையருளால் நிகழ்ந்த அற்புதங்கள் பல. இவை தேவார ஆசிரியர்கள், உலகினரைமருட்டத் திட்டமிட்டு நிகழ்த்தியவை அல்ல. இவ்வற்புதங்கள் சமயத் துறையில் நிகழ்த்திய சாதனைகள் பலப்பல. ஆயிரம் மேடைப் பேச்சுகளாலும், பல்லாயிரம் பிரச்சாரங்களாலும் ஏற்படுத்த இயலாத சமய உணர்வை இத்தகு அற்புதங்கள் சிலவிநாடிகள் மக்கள் நெஞ்சில் நிகழ்த்த வல்லன. குறிப்பாகப் பாமர மக்களை ஈர்ப்பதில் இவற்றின் பங்கு பெரிது. சமயாசாரியர்கள் வரலாற்றில் இத்தகு அற்புதங்கள் பலவற்றை விரிவாக விளக்கி, அவற்றோடு அக்காலை எழுந்த திருப்பதிகங்களைச் சேக்கிழார் இணைத்துக் காப்பியம் செய்திராவிடின் சைவம் இத்தகு உயர்ச்சியை எய்தி இருத்தல் கூடுமா என்பது ஐயத்திற்குரியது. 'மாசில் வீணையும்' என்று தொடங்கும் பதிகத்தில்[43] 'நீற்றை' பற்றிய விளக்கமான குறிப்பில்லை. சேக்கிழார் பின்னணி அமைத்து ஒளியூட்டுகின்றார் 'சுண்ணவெண் சந்தனச் சாந்தும்'[44] என்ற பதிகத்தைப் பற்றுக் கோடாகக் கொண்டு அப்பரடிகளையானைக் காலின் கீழ் இடறச் செய்ததாக அறிவிக்கிறார். அற்புதங்கள் யாவும் உண்மையா என்ற ஆய்வு தேவையற்றது. இவற்றுள் கற்பனையாகப் படைத்துக்கொண்டதாகக் கூட இருக்கலாம். ஆனால் தக்க பதிகங்களை மேற்கோள் காட்டி நிறுவும் சேக்கிழாரின் திறன் பாராட்ட வைக்கிறது. சமயத் துறையில் நூல் செய்வார் முதலில் மக்களுக்கு நம்பிக்கை ஊட்டவேண்டும். அதனைச்செய்வதில் பெரியபுராணம் பெரு வெற்றி பெற்றுள்ளது.

தேவார மூவர் வரலாற்றை ஏராளமான சம்பவங்களோடும், அற்புதங்களோடும் விரிவாக விளக்கிச் செல்லும் பெரியபுராணம், ஏனைய அடியவர் வாழ்வையும் முரண்பாடு இல்லாது அழகுணர்ச்சியோடு விரித்துரைக்கிறது. கண்ணப்பர் வரலாற்றின் அன்பின் ஆழ அகலங்களைப் பெரிய புராணம் விரித்துக் காட்டுகின்றது. சிறுத்தொண்டர் வரலாற்றின் ஆழ அகலங்களைப் பெரியபுராணம் விரித்துக் காட்டுகின்றது. சிறுத்தொண்டர் வரலாற்றில் வாழ்வில் தமக்குத் தாமே வரையறுத்துக் கொண்ட நியதிகளைக் காப்பாற்ற ஓர் மனிதன் எத்தகு சாதனைகளையும் நிகழ்த்த இயலும் என்பது ஒளியூட்டப் பெற்றுள்ளது. சமயஞ்சார்ந்த பெண்மையைக் காரைக்கால் அம்மையார் வழி எடுத்துரைக்கிறது. விருந்தோம்பல் பண்பாட்டை இளையான்குடிமாறர் வரலாற்றில் பேசுகிறது. இத்தகு வரலாறுகளை வடித்து வழங்கிப் பெரிய புராணம் சமய வாழ்வில் விழிப்புணர்வினைத் தோற்றியது.

**4. சமயத்தின் ஒளியில் சாதி பேத இருள் நில்லாது என விளக்கி, பல்வேறு குலத்து அடியவர் திருமேனிகளைச் சிவாலயத்தில் எழுந் தருளுவிக்கச் செய்தது.**

தமிழகத்தில் சக்தி பீடங்களாகப் போற்றப் பெற்ற ஒன்றிரண்டு தலங்களைத் தவிர ஏனைய தலங்களில், கி. பி. 7 ஆம் நூற்றாண்டு முதல் கட்டப்பெற்ற சிவாலயங்கள் சிவலிங்கத் திருமேனிகளை மட்டுமே கொண்டிலங்கின. சிவாலயங்களில் உமையம்மைக்கும், ஏனைய தெய்வங்களுக்கும் தனிக் கோயில் அமைக்கும் வழக்கம் முதல் இராசராசசோழன் காலத்திற்கும் பின்னரே தோன்றியிருக்க வேண்டுமென்று அறிஞர் கூறுவர்[45]. சிவபெருமானைத் தவிர, உமையம்மைக்கோ, அன்றி விநாயகர், முருகன் போன்ற இறையவர்களுக்கோ தேவாரங்களில் தனிப்பாடல்களாக

43. ஐந்தாம் திருமுறை ; 91-1.
44. நாலாம் திருமுறை; 2-1.
45. இராசமாணிக்கனார். மா. டாக்டர். 'சைவசமயவளர்ச்சி' பக்கம் 54.
46. திருக்குறள். 50.
47. ஷை 702.

அமைந்த துதிகள் இல்லை என்பது நினைவு கூரத் தக்கது. சிவபெருமானைத் தவிர ஏனைய இறையவர்களுக்கே திருக்கோயிலுள் இடம் இல்லை என்ற நிலையில், மானிட அடியவர் திருமேனிகள் சிவாலயங்களில் பண்டு எழுந்தருள்விக்கப் பெற்றிருக்க வில்லை என்பது தாமே போதரும்.

'வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்' என்பர் வள்ளுவர்[46]. 'ஐயப்படாது அகத்தணர்வானைத் தெய்வத்தோடு ஒப்பக் கொளல்' என்பதும் திருவள்ளுவர் ஆணையே[47]. பிறர் குறிப்பினை அவர் கூறாமலே உணர்ந்து, வழங்கி, இறைநெறி நின்று, மனிதப் பண்புகளுக்கு ஒளியூட்டி வாழ்வாங்கு வாழ்ந்த சைவச் சீரடியார்கள் தெய்வமாகப் போற்றி வணங்கத் தக்கவர்கள், வழிபடத்தக்கவர்கள். இவர்களுக்கும் திருமேனி வடித்துச் சிவாலயங்களுல் எழுந்தருள் வித்து வணங்க வேண்டும் என்ற எண்ணம் தமிழ் மன்னர்கள் அரசியல் அலுவலர்கள் மற்றும் பொது மக்கள் உள்ளங்களில் ஊற்றெடுக்க உதவிய பெருமை பெரியபுராணத்திற்கே உரியது.

பிற்கால சோழர் ஆட்சிக் காலத்தில் மன்னவர் சிலரும், அரசியல் அலுவலர் சிலரும் சைவச் சீரடியார் வரலாறுகளில் தோய்ந்து, அடியவர் சிலரது திருமேனிகளைச் செம்பிலும், கல்லிலும் வடித்துச் சிவாலயத்தில் எழுந்தருள்வித்தாகக் கல்வெட்டுக்கள் அறிவிக்கின்றன[48]. என்றாலும் அறுபத்து மூன்று சீரடியார்களும் சிவாலயங்களில் எழுந்தருள்விக்கப் பெற்று, இறைவனோடு ஒப்ப நித்திய, நைமித்திக பூசைகள் பெற்றுச் சிறந்தமை சேக்கிழாரின் பெரிபுராணம் தமிழ் மண்ணில் விரிந்த பின்னரே என்பது நினைவு கூர்ந்து மகிழத்தக்கது. குறிக்கத்தக்க சில சாதியார் சிவாலயங்களில் நுழைய தடை நிலவியிருந்த காலத்தில் அத்தகு குலங்களில் பிறந்த அடியவர்கள் திருக்கோயில்களுக்குள்ளே தெய்வத் திருமேனியோடு வழிபடப் பெற்றமை பெரிய புராணம் விளைத்த வெற்றியே எனின் மிகையன்று. சீர்காழி போன்ற தலங்களில் திருஞான சம்பந்தர் முதலிய அரளாளர்களுக்குத் தனிக்கோயில் அமைந்ததும், சிவாலயங்கள் தோறும் தேவார மூவர் இடம் பெற்றதும், குறிப்பிட்ட சில பெரிய சிவாலயங்களில் கல்லிலும் செம்பிலும் அறுபத்து மூவர் திருமேனிகள் எழுந்தருள்விக்கப் பெற்றதும் பெரிய புராணச் செல்வாக்கால் என்பது எண்ணி மகிழத்தக்கது.

**5. வழிபாட்டுச் சமயமாக - சடங்குச் சமயமாக நின்று விடாது சைவத்தை அர்த்தமுள்ள வாழ்க்கைச் சமயமாக்கி வழங்கியது.**

சைவசமயம் போற்றத்தக்க வளர்ச்சி பெற்றது கி.பி. 7 ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதி முதலாவதாகவே என்பதை வரலாற்றாசிரியர்கள் தெளிவாக விளக்கியுள்ளனர்[49]. சைவ சமயாரியருள் திருஞான சம்பந்தரும், திருநாவுக்கரசரும் தமிழ் நாடெங்கும் தலயாத்திரைகள் மேற்கொண்டு ஆங்காங்குள்ள சிவாலயங்களில் வழிபாடுகள் நிகழ்த்தி, பக்திப் பாமாலைகள் புனைந்து போற்றித் தமிழகத்தில் பக்தி வெள்ளம் பெருக்கெடுக்கச் செய்தனர். இவ்விரு அருளாளர் மேற்கொண்ட வழிபாட்டு நெறிகளை கிரியை மற்றும் சரியை என்று சைவசித்தாந்திகள் குறிப்பர். முன்னது வேள்வியோடு கூடிய சடங்கு நெறி. பின்னது மலர் இட்டுப் பூசிக்கும் தொண்டு நெறி. இவ்விரு அருளாளர்களும் தோற்றிய பக்தி இயக்கத்தால் சிவாலயங்களில் ஆறுகால பூசைகள் சிறந்தன. வேத வேள்விகள் விளக்கமுற்றன. சமயமும், சமயஞ் சார்ந்த சடங்குகளும் பெரிதும் சிறப்புப் பெற்றன.

கரைபுரண்டு ஓடிய பக்தி இயக்கத்தில் சடங்குகளுக்கு இன்றியமையாமை வந்துற்ற காலத்தில், அவை காரணமாக சமயஞ்சார்ந்தநடைமுறை மற்றும் எண்ணங்களீ பெண்ணின் மூக்கும் கையும் வெட்டப்பெற்ற வரலாறும்,[50] இறையடியவர் கறிய முதுக்காக என்ற காரணத்தால், மகனை முத்தமிட்டால் எச்சில் பட்டுவிடுமென்று கருதிய வேடிக்கையான எண்ணங்களும்,[51] பஞ்சகாலத்தில் இறைவனுக்கு என்று ஒதுக்கப் பெற்ற உணவினை எடுத்து உண்ட சுற்றத்தாரையும், கருவிலிருந்த குழந்தைகளையும் குடர்சரிய வெட்டிக் கொன்ற வியப்பூட்டும் பக்தியும்,[52] சமயம், சடங்கு நோக்கில் எந்த அளவு வேரூன்றிக் கிடந்திருக்கிறது என்பதற்குச் சான்று பகர்வன.


---

48. தென்னிந்தியத் திருக்கோயிற் கல்வெட்டுக்கல். பக்கம் 55, 60.

49. துரைசாமிபிள்ளை. ஔவை. சு. சைவ இலக்கிய வரலாறு பக்கம் 88,

50. பெரியபுராணம் - பாடல் 4106.

51. ஷை - பாடல் 3725



சமயமும், சமயச் சடங்குகளும் ஏதேனும் ஒரு வகையில் மனித ஈடேற்றத்திற்குப் பயன் படுவதானால் வேண்டும் என்பது சேக்கிழாரின் திருவுள்ளம். சடங்குகள் மனித அன்பின் உயர்ச் சிக்கும், ஈடேற்றத்திற்கும் தடைபயக்குமானால் அதைத் தகர்த்தெறிவதில் தவறேதும் இருக்க இயலாது. பெரியபுராண வரலாறுகளில் பல நேரடி யாக - அல்ல பண்பாடு கருதி மறைமுகமாகச் சடங்கு களைத் தகர்த்தெறிந்து, அன்பின் முன்னே அவை அர்த்தமற்றவை என நிறுவுதல் கூர்த்தறிந்து போற்ற வேண்டுவது. குழந்தைகளுக்கு முத்தம் இட்டால் எச்சில் பட்டுவிடும் எண்ணத்தை, வாயிலிட்டுச் சுவைத்துப் பர்த்த பன்றியின் ஊன் எனக்குச் சிறந்த படையல் என்று ஏற்ற இறைவன் திருவுள்ள வெளிப் பாட்டின் வாயிலாகச் சேக்கிழார் தகர்க்கிறார்.[53] அன்பு மிகக் கொண்ட பெண் ஒருத்தி எச்சில் பட என் மேனி மீது ஊதிய இடமே எனக்குக் குளிர்கிறது என்று பேசிய சிவபரம்பொருளைக் காட்டி,[54] மலரை முகர்ந்தாலும் தவறில்லை; முடிமீது பறித்து வந்து அர்ச்சிப்பதாலும் தவறில்லை; அன்பே எனக்கு விருப்பம் என்று ஆண்டவன் திருவுள்ளத்தை விளக்கிச் சடங்கு எண்ணங்களுக்கு முடிவுகட்டும் சான்றான்மையை அங்கே தரிசிக்கிறோம்.

சேக்கிழாரின் பெரியபுராணம் சமயம் வேறு; வாழ்வு வேறு என்ற நிலை தோன்றிவிடாது சமயங் கலந்த வாழ்வைத் துல்லியமாக வடித்துக் காட்டிச் சடங்குசமயமாக மாறிவிட இருந்த சைவத்தை வாழ்க்கைச் சமயமாக்கி வழங்கிய பெருமைக்கு உரியது. ஒல்லும் வகையான் அறவினை செய்தலும், அதனை இறைவன் பெயரால் செய்தலும் சமயம் கலந்த வாழ்வாகச் சேக்கிழாரால் வடித்துக் காட்டப்பெற்றன. வாழ்வு, மட்பாண்டம் செய்தல் என்றால் சிவனடியார்களுக்குத் திருவோடு செய்து வழங்குவேன்;[55] வாழ்வு அழுக்கு வெளுத்தல் என்றால் அடியவர் ஆடைகளை அழுக்கு நீக்கித் தருவேன்,[56] நெசவு எனக்குத் தொழிலானால் இயன்றவாறு அடியவர்களுக்கு ஒரு கௌபீனம் வழங்குவேன்[57] என்று வரையறுத்துக் கொண்டு, சமயத்தின் பேரால் சடங்குகளில் நாட்டங் காட்டாது, மனிதர்களுக்கு அன்பு செய்த அடியவர்களை முன்னிறுத்திக் காட்டிப் பெரியபுராணம் சைவத் திற்கு வாழ்வளித்திருக்கிறது.

(அடுத்த இதழில் நிறைவுபெறும்)

---

52. பெரிய புராணம் - பாடல் 4148
53. ௸ - பாடல் 810
54. ௸ - பாடல் 1850
55. ௸ - பாடல் 362.
56. ௸ - பாடல் 1196.
57. ௸ - பாடல் 504.

திருமுறைகளில் பயின்றுள்ள

# திருத்தலங்களும், இறைவன் – இறைவி திருப்பெயர்களும்

| வ. எண் | தலத்தின் பெயர் | இறைவன் பெயர் | இறைவி பெயர் |
|---|---|---|---|
| 1. | திருஅகத்தியான்பள்ளி | அகத்தீசுவரர் | பாகம்பிரியாள் |
| 2. | திருஅச்சிறுபாக்கம் | ஆட்சிகொண்டார் | இளங்கிளைநாயகி |
| 3. | திருவஞ்சைக்களம் | அஞ்சைக்களத்தப்பர் | உமையம்மை |
| 4. | திருவண்ணாலை | அண்ணாமலையண்ணல் | உண்ணாமுலையம்மை |
| 5. | திருவதிகை | வீரட்டேசுவரர் | திரிபுரசுந்தரி |
| 6. | திருஅம்பர்ப்பெருந்திருக்கோயில் | பிரமபுரீசுவரர் | பூங்குழலம்மை |
| 7. | திருஅம்பர் மாகாளம் | மாகாளநாதர் | அச்சம்தீர்க்கும் அம்மை |
| 8. | திருஅரசிலி (ஒழிந்தியாப்பாட்டு) | அரசிலிநாதர் | பெரியநாயகி |
| 9. | திருஅரதைப்பெரும்பாழி (அரித்துவாரமங்கலம்) | பாதாளேசுவரர் | அழகம்மை |
| 10. | திருஅரிசிற்கரைப்புத்தூர் (அழகார்புத்தூர்) | படிக்காசு அளித்த பரமர் | அழகாம்பிகை |
| 11. | திருஅவளிவணல்லூர் | சாட்சிநாதர் | அழகம்மை |
| 12. | திருஅவிநாசி | அவிநாசியப்பர் | கருணாம்பிகை |
| 13. | திருவழுந்தூர் | வேதபுரீசுவரர் | சுந்தராம்பிகை |
| 14. | திருஅறையணிநல்லூர் | அறையணிநாதேசுவரர் | அருள்நாயகி |
| 15. | திருஅனேகதங்கபாதம் | அருண்மன்னேசுவரர் | மனோன்மணியம்மை |
| 16. | திருஅன்பிலாலந்துறை | ஆலந்துறைநாதர் | சுந்தரநாயகி |
| 17. | திருவன்னியூர் | இடர்த்துணைநாதர் | பெரியநாயகியம்மை |
| 18. | திருஆக்கூர் | தான்தோன்றியப்பர் | வாள்நெடுங்கண்ணியம்மை |
| 19. | திருவாடானை | ஆடானைநாதர் | அன்புஅம்மை |
| 20. | திருவாப்பனூர் | திருவாப்புடையார் | குரவங்கமழ் குழலி |
| 21. | திருவாப்பாடி | பாலுகந்தபரமர் | பெரியநாயகியம்மை |
| 22. | திருவாமாத்தூர் | அபிராமேசுவரர் | முத்தாம்பிகையம்மை |
| 23. | திருவாரூர் | புற்றிடங்கொண்டார் (வீதிவிடங்கர்) | அல்லியங்கோதை |
| 24. | திருவாரூர் அரநெறி | அரநெறியப்பர் | வண்டார்குழலி |
| 25. | திருவாரூர்ப்பரவையுண்மண்டளி | தூவாய்நாதர் | பஞ்சின்மெல்லடியம்மை |
| 26. | திருவாலங்காடு | தேவர்சிங்கப்பெருமான் | வண்டார் குழலியம்மை |
| 27. | திருவாலம்பொழில் | ஆலம்பொழில்அப்பர் | ஞானாம்பிகை |
| 28. | திருவாலவாய் (மதுரை) | சொக்கநாதர் | மீனாட்சியம்மை |
| 29. | திருவாவடுதுறை | மாசிலாமணிமணீசுவரர் | ஒப்பிலா முலையம்மை |
| 30. | திருஆவூர் | பசுபதீவரர் | மங்களநாயகி |

(தொடரும்)

## வினாவும் விடையும்

**1. தேவாரத்தில் ஒரு திருப்பதிகம் ''விழாத் திருப் பதிகம்'' என வழங்கப்படுகின்றது? அப்பதிகம் எது? அருளிய அருளாளர் யார்?**

திருமயிலையில் திருஞானசம்பந்தர் அருளிய ''மட்டிட்ட புள்ளையங் கானல்'' எனத் தொடங்கும். திருப்பதிகம் ''விழாத் திருப்பதிகம்'' ஆகும். இப் பதிகத்தில் ஐப்பசி ஓணவிழா, கார்த்திகை தீப விழா, மார்கழி திருவாதிரை விழா, தைப்பூசவிழா, மாசி மகவிழா, பங்குனி உத்திர விழா, பொற்றாப்பு விழா, பெருஞ்சாந்தி விழா ஆகிய விழாக்கள் பற்றிய குறிப்பு கள் வருவதால் இப்பதிகம் ''விழாத் திருப்பதிகம்'' என வழங்கப்படுகின்றது.

''ஐப்பசி ஓணவிழாவும் அருந்தவர்கள்
துய்ப்பனவும் காணாதே போதியோ
பூம்பாவாய்''
''தொல் கார்த்திகை நாள் ... விளக்கீடு காணாதே
போதியோ பூம்பாவாய்''
''ஆதிரைநாள் காணாதே போதியோ
பூம்பாவாய்''
''தைப்பூசம் காணாதே போதியோ பூம்பாவாய்''

''மாசிக் கடலாட்டுக் ... காணாதே
போதியோ பூம்பாவாய்''
''பங்குனி உத்திர நாள்
ஒலிவிழாக் காணாதே போதியே பூம்பாவாய்''
''பதினெண் கணங்கள் தம் அட்டமிநாள்
கண்ணாரக் காணாதே போதியே பூம்பாவாய்''
''பொற்றாப்புக் காணாதே போதியோ
பூம்பாவாய்''
''பெருஞ் சாந்தி காணாதே
போதியோ பூம்பாவாய்''

என்று திருஞானசம்பந்தர் தமிழகத் திருவிழாக் களை அடுக்கிக் கூறியுள்ள இந்த அற்புத விழாப் பதிகத்தை ஓதி மகிழ்வார்க்கு ஆயுளும், வளங்களும் நலங்களும் பெருகுவது திண்ணம் ஆகும்.

**2. தேவாரத்தில் ஒரு திருப்பதிகம் ''நவராத்திரி விழாத் திருப்பதிகம்'' எனச் சுட்டப்படுகின்றது? அப்பதிகம் எது என்பது தெரியுமா? அப்பதிகம் அருளிய அருளாளர் யார்?**

திருஞானசம்பந்தர் திருமயிலையில் அருளிச் செய்த தேவாரத் திருப்பதிகத்தில் பல விழாக்களைப் பற்றிக் கூறியிருக்கும்போதிலும், புரட்டாசியில் சிறப்புற நடைபெறும் நவராத்திரி விழாவைப்பற்றி அப்பதிகத்தில் குறிப்பிடவில்லை.

எனினும் அவரே அருளியுள்ள திருச்சிவபுரம் தேவாரத் திருப்பதிகத்தில் கலைமகள், திருமகள், செயமகள் பற்றிய குறிப்புகள் காணப்படுவதனால் இத்திருப்பதிகத்தை நவராத்திரி விழாவிற்குரிய திருப் பதிகமாகக் கொள்ளலாம் எனச் சான்றோர் குறிப் பிடுகின்றனர்.

''சிவபுரம் நினைபவர் திருமகளொடு திகழ்வரே''
''சிவபுரம் அது நினைபவர் செயமகள் தலைவரே''
''சிவபுரம் நினைபவர் கலைமகள் தர திகழ்வரே''

என இப்பதிகத்தில் வரும் தொடர்கள், இப்பதிகம் பாடுவார்க்குத் திருமகள், கலைமகள், செயமகள் திருவருளை நல்கும் என்பது திண்ணம்.

**3. முருகப் பெருமானுக்கு உரிய வாகனம் மயில் தானே! மயில் வாகனம் அன்றிப் பிற வாகனங்கள் முருகருக்கு உண்டா?**

முருகப் பெருமானுக்கு உரிய முதன்மை வாகனம் மயில் ஆகும்.

''ஏறுமயில் ஏறி விளையாடு முகம் ஒன்றே''

என்று அருணகிரிநாதரும், ''செவ்வேள் ஏறிய மஞ்ஞை வாழ்க'' (மஞ்ஞை - மயில்) என்று கச்சியப்ப சிவாச் சாரியாரும் அருளியிருப்பது கொண்டு முருகப் பெரு மானுக்கு உரிய முதன்மை வாகனம் மயிலே என்று அறியலாம்.

மயில் வாகனம் அன்றி முருகப் பெருமானுக்கு யானையும், ஆடும் கூட வாகனங்களாக அமைந்து விளங்குகின்றன.

முருகன் யானைமேல் அமர்ந்து விளங்கும் நிலையில் கஜவாகனர் எனப்போற்றப்படுவார். முருக னின் யானை வாகனத்திற்குப் பிணிமுகம் என்பது பெயர்.

''ஓடாப் பூட்கைப் பிணிமுகம் வாழ்த்தி'' என்பது திருமுருகாற்றுப்படை.

நாரதரின் வேள்வியில் தோன்றி உலகங்களைத் துன்புறுத்திய ஆட்டுக்கிடாயினை வீரவாகு தேவரை அனுப்பிப் பிடித்துவரச்செய்து முருகன் அதன் மீது ஏறி எண்திக்கும் வலம் வந்தார் எனக் கந்தபுராணம் கூறுகின்றது.

''நவையில் சீர் முனிவர் தேவர்
நயப்ப நாரதன் என்றுள்ளோன்
புவிதனில் வந்து முற்றப் புரிந்தனன்
முன்னர் வேள்வி
அவர்புரி தவத்தின் நீரால்
அன்று தொட்டு அமல மூர்த்தி
உவகையால் அனைய மேடம்
ஊர்ந்தனன் ஊர்தியாக''

*- கந்த புராணம்.*

# வாசகர் எண்ணங்கள்

திருக்கோயில் இதழ் மலர்ந்து ஆண்டு பல ஆகியும் அதன் மனம் மாறாமல் நிலை பெற்றுள்ளது. தற்காலம் ஆணையர்சுற்றறிக்கைகள், திருமுறைகளின் விளக்கம், ஆழ்வார்களின் அமுதத் தமிழ்ச்சுவை, தெய்வீக நூல் களில் ஏற்படும் சந்தேகங்களுக்கு வரும் விடை விளக்கத் தெளிவு - எங்கள் போன்ற பள்ளி மாண வர்களுக்கும் பயன்தரக்கூடிய வகையில் அமைந் துள்ளது.

ஜுலை திருக்கோயில் இதழில் ''குமரகுரு பரர் திருவுள்ளம்'' 16 பிரபந்தங்களின் பெயர் தெரிய லுற்றேன். ஆகஸ்டு இதழில் வாலியை இராமர் மறைந்திருந்து அம்பு எய்த காரணம் எங்கள் போன்ற மாணவர்களுக்கு விளக்கமாக அமைந்தது. கோயில் களுக்குச் சென்று **'திருக் கோயில்'** இதழைக் கேட்டும் படித்தும் வருகின்றோம்.

நன்றியுள்ள மாணவன்

**- ஜி. பட்டாபிராமன்**
மேல்நிலை முதலாம் ஆண்டு மாணவன்
நேட்டிவ் உயர்நிலைப் பள்ளி,
கும்பகோணம்.

தங்கத்தமிழ் விளக்கே!
இத்தாரணிக்கே அருள் ஒளியே
தீவினை நீங்கத் திருநீலகண்டப் பதிகம் தன்னை
அனுதினமும் நாம் இருவேளை
அகம்மகிழக் கற்று வந்தால்
அல்லல் போம் வல்வினைபோம்
அனைத்தும் நம் உள்ளத்துத் துயரம்போம்
அயராது நாம் வாழ்வோம் மண்ணில் காண்

**- எஸ். வேங்கட கிருஷ்ணமூர்த்தி**
6/6 தோப்புக்கார சந்து
காரமடை, கோவை - 641 104.

அறநிலையத் துறை அறந்தழைக்க ஆற்றி வரும் அரும்பணிகள் அறிந்து மிக்க மகிழ்ச்சி அடை கின்றேன். மகாவித்துவான் பாடிய தலபுராணங்கள், பிள்ளைத்தமிழ் போன்ற நூல்களை வெளியிட அற நிலையத்துறை மேற்கொண்டுவரும் பணிகள் போற்றுதலுக்குரியவை.

**- ப. சண்முக வேலாயுதம்**
பூவானூர் போஸ்ட்,
லால்குடி வட்டம், திருச்சி - 621 712.

திருக்கோயில் படிக்கும்பேறு கிடைத்தது. ஆன்மீக அன்பர்களுக்குக் கிடைத்தற்கரிய உண வினைப் படைத்துள்ளீர்கள். பாராட்டுகள்.

**- டாக்டர் புலவர் பி.சி. கணேசன்**
ஏபி 1701, செக்டார் 14, தெரு 103
கலைஞர் கருணாநிதி நகர், சென்னை - 600 078.

கம்பன் கவிநயமணி வே. தியாகராஜன் அவர் கள் எழுதியுள்ள **''கம்பனும் திருமுறைகளும்''** என்ற கட்டுரையைப் படித்தேன். மிக நன்று. திருக்கோயில் இதழ் நல்ல கருத்துள்ள கட்டுரைகளைத் தாங்கி வருவது பாராட்டிற்குரியது.

**- வித்துவான் எம். நீலகண்டன்,**
சி 2 / 46 நாகை ரோடு,
பிரியா தியேட்டர் எதிர், வேதாரண்யம்.

அன்புடையீர்,

வணக்கம், திருக்கோயில் இதழ் கண்டேன். நான் பல பத்திரிகைகளுக்கு ஆன்மீகக் கட்டுரைகள் தலக் கட்டுரைகள் எழுதி வருகின்றேன். தங்கள் பத்திரிகைக்கும் எழுத விரும்புகின்றேன்.

**-என். இராமகிருஷ்ணா**
126, பட்டமங்கலத் தெரு, மயிலாடுதுறை - 609 001.

**''திருக்கோயில்''** இதழ் புதுப் பொலிவுடன் வருவது கண்டு பெருமகிழ்வினை அடைகின்றேன்.


''நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு''

என்ற குறளுக்கு இலக்கணமாய் அமைந்து, தரமான ஆன்மீக இதழ் என்றால் ''திருக்கோயில்'' இதழ் என்று கூறும் அளவு இதழின் தரமும் பொலிவும் ஏற்றம் கண்டிருப்பது வரவேற்கத்தக்கது.

ஆணையாளர் அவர்களின் சுற்றறிக்கைகள் இத்துறையில் அவர் கொண்டுள்ள ஈடுபாட்டினை உணர்த்துவதாக அமைந்துள்ளன. அவருடைய எண ணங்கள், செயற்பாடுகள் யாவும் வெற்றி பெற்று திருக் கோயில்களால் சிறப்புற்று விளங்கும தமிழகம், மென்மேலும் சிறப்புகள் பெற்று, ஆன்மீகமும் அருந்தமிழும், தமிழ்ப்பண்பாடும் தலைசிறந்து ஓங்க வேண்டுமென்று விழைகின்றேன்; வாழ்த்துகின்றேன்.

**- டாக்டர் இரா. கு. நாகு**
திருவேங்கடம், 169, சிரீதரன் தெரு,
அய்யாவுநாயுடு குடியிருப்பு, சென்னை - 600 029.

★★★



அருள்மிகு முக்குறுணி விநாயகர் (மதுரை மீனாட்சிசுந்தரரேசுவரர் ஆலயம்)

திருக்கோயில் வாசகர்களுக்கு எங்கள் தீபாவளி வாழ்த்துக்கள்

பதிவு எண். TN (MSC) 7039 / WPP / 325 / 98



அருள்மிகு பண்ணாரி மாரியம்மன்

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை - 600 034.
ஆசிரியர் : கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம் எம்.ஏ., பி.எச்.டி.,